


# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்



**1879 -1916** ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 6 இதழ் - 3 மே-ஜுன் 2020

**R5169**

## Abraham And the Hebrews

## ஆபிரகாமும் எபிரேயர்களும்

*ஆதியாகமம் 12:1-9*

*"உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய்." ஆதியாகமம் 12:2*

ஆபிரகாமுக்கு வேதாகமத்திலே கொடுக்கப்பட்ட சிறப்பு பெயர்களில் ஒன்று "விசுவாசத்தின் தந்தை" என்பது. வேதாகம வரலாற்றில் சிறந்த குணலட்சணம் உடையவர்களில் இவர் ஒருவர். பூமியின் மிகுந்த ஞானமுள்ள ஜனங்கள் (யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முகமதியர்கள்) தங்களது மதநம்பிக்கைகள் மற்றும் எதிர்காலத்தை பெற்றிருப்பதற்கு, தெய்வீக நியமனம் பெற்ற ஒரு வழியாக இவரை பின்னோக்கி பார்க்கிறார்கள். தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தமே இந்த ஜனங்கள் அனைவருக்கும் விசுவாசத்தின் அடிப்படையாக அமைகிறது. ஆனால் அவர்களில் பெரும்பாலோர் உண்மையை அறியாதிருக்கிறார்கள்.

யூதர்கள், ஈசாக்கு மற்றும் யாக்கோபு மூலமாக ஆபிரகாமின் இயற்கையான சந்ததியினராக இருக்கின்றனர். முகமதியர்கள் ஆபிரகாமின் குடும்பத்தினரான இஸ்மயேல் மற்றும் ஏசாவின் சந்திதியினராக இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள், கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்பட்டு அவருக்கு உடன் சுதந்தரராகி ஆபிரகாமின் வித்துக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிரதானமான ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரர் என்று கூறிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் இயேசுவை ஈசாக்கின் உண்மைப் பொருள் என்றும் எல்லாவற்றிற்கும் சுதந்தரர் என்றும் கருதுகிறார்கள். (கலாத்தியர் 3:29)

யூதர்களும் புறஜாதிகளும் சேர்ந்த கிறிஸ்துவின் சபையானது ஈசாக்கின் மனைவியாகிய ரெபேக்காளுக்கு உண்மைப் பொருளாகவும் உடன் சுதந்தரராகவும் புதிய ஏற்பாடு கூறுகிறது. இந்த சபையானது மேசியாவின் ராஜ்யத்தில் மணவாட்டியாகவும் உடன் சுதந்தரராகவும் இருக்கக்கூடியதாக இருக்கிறது. இதில் ஆபிரகாம் யேகோவா தேவனுக்கு முன்னடையாளமாகவும், ஈசாக்கு இயேசுவுக்கு முன்னடையாளமாகவும், ரெபேக்காள் சபைக்கு முன்னடையாளமாகவும் சித்தரித்து காட்டப்படுகிறார்கள். ஆபிரகாமின் இந்த ஆவிக்குரிய சந்ததி சுபாவ இஸ்ரயேலர்களையும் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கக்கூடிய தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்க வேண்டியதாக இருக்கிறது என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. ஆனால் ஐயகோ, புதிய ஏற்பாட்டின் அநேக போதனைகள் மத்திய கால இருளில் மறைக்கப்பட்டன.

கிறிஸ்தவர்கள், தங்களது பரம அழைப்பையும், தாங்கள் மேசியாவின் ராஜ்யத்தில் உடன் சுதந்தரராக இருக்க வேண்டியதையும், ராஜ்யமானது பூமியின் சகல வம்சங்களையும் இன்னும் ஆசீர்வதிக்க வேண்டியிருக்கிறது என்பதையும் மறந்து விட்டார்கள். அதற்கு பதிலாக, தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் மட்டுமே காக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் பரலோகத்தின் கொத்தளங்களை பார்த்துக் கொள்பவர்கள் என்றும் குறுகிய கண்ணோட்டத்தைப் பெற்றார்கள். மனுக்குலத்தின் மற்றவர்கள் எல்லாம் நித்திய ஆக்கினையில் இருந்து என்றென்றும் அவர்களது வேதனைக்குரல் கேட்டுக் கொண்டே இருக்கும் என்றும் காண்கிறார்கள். இப்பொழுதுதான் வேத மாணவர்கள் படிப்படியாக விசுவாச கோட்பாடுகளிலிருந்து விடுபட்டு, தேவனுடைய வசனங்களின் போதனைகளுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதான் பரிசுத்த பவுல் சபைக்கு கூறிய கருத்துக்களை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியரராயும் (அவருக்கு கொடுக்கப்பட்ட) வாக்குத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (காலத்தியர் 3:29)

இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் கீழ், ஒவ்வொரு யூதனும், ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு முகமதியனும் ஒரு காலத்தில் ஆபிரகாம் வாழ்ந்திருக்கிறார் என்பதில் உறுதியாக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று ஒருவர் எண்ணலாம். உண்மையிலேயே தேவன் ஆபிரகாமிடத்தில் செய்த வாக்குத்தத்தங்கள் மேல் அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கைதான் யூதர்களை ஒரு ஜாதியாக ஒன்றாக வைத்தது; கிறிஸ்தவர்களை அதே வாக்குத்தத்தத்தின் சுதந்தரர் ஆகும்படி அனைத்து தேசங்களிலிருந்தும் கூட்டிச் சேர்த்தது. எனினும் நமது காலத்தின் படித்த யூதர்களும் கிறிஸ்தவர்களுமே குறைகூறுபவர்களாக மாறிக் கொண்டிருப்பது விநோதமாக இருக்கிறது. அவர்கள் ஆபிரகாகாமையும் அவரிடத்தில் தேவன் செய்த வாக்குத்தத்தங்களையும் வெறும் புராண கதைகள் என்று நிராகரிக்கிறார்கள். தங்களது நிலைகளில் முரண்பாடாக இருப்பதை கண்டுணராதிருப்பது எப்படி விநோதமாக இருக்கிறது. இது ஒரு நாயின் வால் தனது தலையை ஏற்காதது போல் இருக்கிறது.

இவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் வாழ்ந்து கொண்டு, ஐம்பது மொழிகளை பேசிக்கொண்டு, இன்னும் தங்களை

யூதர்களாகவே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களை ஒரு ஜனமாக விவரிக்கிற தேவனுடைய போதனையின்படி ஆதியில் எந்த ஜாதியாரோடும் சேராமல் தனித்து வைத்து, இறுதியில் ஒரு ஆசீர்வாதத்தின் நம்பிக்கையில் இருக்கிற தேவனுடைய விநோதமான வாக்குத்தத்தங்களை ஒதுக்கி வைத்தால், யூதர்கள் என்ன சமாதானம் கூறுவார்கள்? ஆபிரகாமை ஒதுக்கிவைக்கிற ஒரு யூதனோ அல்லது கிறிஸ்தவனோ அறிவுப்பூர்வமான சிந்தனையாளர்களின் பார்வையில் தன்னை முட்டாளாக்கிக் கொள்கிறான். இப்படிப்பட்டவர்கள் யூதாயிசம் மற்றும் கிறிஸ்தவம் ஆகியவற்றின் அனைத்து உரிமைகளிலிருந்தும் தங்களை நீக்கிக் கொள்கிறார்கள்.

## ஆபிரகாமுக்கு தேவனுடைய அழைப்பு

ஆபிரகாம் என்கிற பெயர் திரளானவர்களின் தந்தை என்பதை குறிக்கிறது. இந்த பெயர் அவருக்கு தேவனுடைய அழைப்பைக் கேட்டு தனது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் காண்பித்த பிறகே கொடுக்கப்பட்டது. அவரது பழைய பெயர் ஆபிராம் என்பதற்கு உயர்த்தப்பட்ட விசுவாசம் என்று பொருள். ஆபிரகாம் என்கிற பெயர் புதிய ஏற்பாட்டில் எழுபத்தி நான்கு தடவை வருகிறது. இயேசு அவரை பத்தொன்பது தடவை குறிப்பிடிருக்கிறார். கர்த்தராகிய இயேசு, பரிசுத்த பவுல், பரிசுத்த ஸ்தேவான், பரிசுத்த பேதுரு இன்னும் மற்றவர்களால் வெளிப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாட்டின் வேத சாஸ்திரங்கள் எல்லாம் தேவன் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தங்களின் அடிப்படையிலேயாகும்.

ஆபிரகாமின் பிறந்த இடம் ஊர் என்கிற கல்தேயர் பட்டணம் ஆகும். இது ஆசியாவின் செல்வம் கொழிக்கும் இடமாகவும், பாரசீக வளைகுடாவிலிருந்து வடக்கே நூற்றி இருபது மைல் தூரத்திலும் இருக்கிறது. அவரது தந்தை தேராகு ஒரு புறசமயத்தான். பல தெய்வங்களை வணங்குகிற பல தெய்வ வணக்கம் அங்கே பரவியிருந்தது. பையனாக இருந்தபோது தன்னைச் சுற்றியிருந்த துன்மார்க்கத்தை எல்லாம் வெறுத்தார் என்று ஆபிரகாமைப்பற்றி யூத பழங்கால கதைகள் கூறுகின்றன. அவர் பதிநான்கு வயதான போதே சிலை வணக்கத்தில் தன் குடும்பத்தோடு இணைய மறுத்தார். மேலும் ஒரு சமயத்தில் விலையுயர்ந்த எழுபத்தியிரண்டு விக்கிரகங்களை அழித்தார்.

அவரது குடும்பம் பலஸ்தீனா தேசத்தின் திசையில் ஊர் என்ற பட்டணத்திலிருந்து ஐந்நூறு மைல் வடமேற்கில் உள்ள ஆரான் என்ற இடத்திற்கு குடியேறியது. அங்கே ஆபிரகாம் தனது தந்தை தேராகின் மரணம் வரை தங்கியிருந்தார். பிறகு அவர் கானானுக்குச் சென்றார். பரிசுத்த ஸ்தேவான் கூறியதின்படி தேவன் ஆபிரகாமோடு தொடர்பு கொண்டது அவர் ஊர் என்ற பட்டணத்தில் இருந்தபோதேயாகும். (அப்போஸ்தலர் 7:2,3) பரிசுத்தமும் தேவனுக்கு கீழ்ப்படிதலும் உள்ள ஒரு புதிய ஜாதியாருக்கு ஸ்தாபகராக இருக்கும்படியாக தேவன் அவரை, தீமை சூழ்ந்திருக்கிறவர்களின் மத்தியிலிருந்து அழைத்தார். அந்த அழைப்பிற்கான வார்த்தைகள் முழுமையாக நமக்கு கொடுக்கப்படவில்லை. அந்த அழைப்பு கொடுக்கப்பட்ட விதத்தைப்பற்றியும் நமக்கு சொல்லப்படவில்லை. ஆபிரகாம் தேவனிடமிருந்து வந்த செய்தியை ஏற்றுக் கொண்டு அவருக்கு கீழ்ப்படிந்தார் என்பது நமக்கு போதுமானதாக இருக்கிறது.

ஆபிரகாம் கானானுக்கு போக வேண்டிய தேதியை தேராகுவின் மரணத்திற்கு முன்னதாக தேவன் குறிக்கவில்லை என்பது நிரூபணமாகிறது. இல்லையென்றால் காலதாமதமாக ஆபிரகாம் சென்றதை நியாயப்படுத்தியிருக்க முடியாது. ஊரிலிருந்து ஆரானுக்கு குடியேறுவதற்கு ஆபிரகாம் ஏதாவது செய்ய வேண்டியிருந்தது. இது அவர்களை தலைநகரின் விக்கிரக வழிபாடுகளிலிருந்து அமைதியான ஆயர் வாழ்க்கைக்கு எடுத்துச் சென்றது. கானானை நோக்கி சரியான திசையில் தான் சென்றாக ஆபிரகாம் உணர்ந்திருப்பார். அவரது தந்தையின் மரணத்திற்கு பிறகு, தெய்வீக ஏற்பாட்டிற்குள் நுழைய அவர் சீக்கிரத்தில் தயாராகியிருப்பார்.

## விக்கிரக ஆராதனைக்காரரிடமிருந்து உன்னை விலக்கிக்கொள்

அழைப்பு இப்படியாக சொல்லப்பட்டிருக்கிறது; "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்கு போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவனை சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 12:1–3)

ஆபிரகாம் தனது எழுபத்தி ஐந்தாம் வயதில், தனது தந்தை தேராகு மரித்தபின், கானான் தேசத்திற்கு தனது பயணத்தை மேற்கொண்டது தெய்வீக அழைப்புக்கு இசைவாக இருந்தது. அங்கே அவருக்கு நில சொத்து ஏதுமில்லை. இலவசமான நிலங்கள் அங்கே இருந்தது. இதற்கு சில காலத்திற்கு முன்பு ஆபிரகாமின் மூத்த சகோதரன் நாகோர் திருமணம் செய்து கொண்டு தனது சொந்த குடும்பத்தை ஏற்படுத்தியிருந்தான். சகோதரன் ஆரானும் தந்தை தேராகும் மரித்துப்போனார்கள். ஆபிரகாம் குடும்பத்தில் மீதி இருந்தது, மனைவி சாராளும், அவரது மூத்த சகோதரன் ஆரானின் மகன் லோத் மட்டுமே. இவர்கள் ஆடுகளையும் மாடுகளையும் ஓட்டிக் கொண்டு கானானுக்குச் சென்றார்கள். கானானின் குமாரர்கள் அங்கே குடியிருந்ததால் அது கானான் என்று அழைக்கப்பட்டது. (ஆதியாகமம் 10:18)

## தேவனிடத்தில் ஆபிரகாமின் மகா பெரிய விசுவாசம்

வேதாகமமானது விசுவாசத்திற்கும் எளிதில் நம்பும் தன்மைக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக வேறுபடுத்திக் காண்பிக்கிறது. ஆபிரகாம் தீயவைகளை எளிதில் நம்புகிறவர் அல்ல, அவர் முழு விசுவாசம் உடையவராயிருந்தார். அவரது இந்த குணாம்சமே விசேஷித்த விதமாக சர்வ வல்லவரிடத்தில் அன்பினால் இணைத்தது. இதனால் அவர் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டார். பரிசுத்த பவுல் எழுதுகிறது போல, "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கும் நீதியாக எண்ணப்பட்டது." ஆபிரகாம் பூரணமானவன் என்றோ வேறு எந்த மனுஷனும் பூரணமானவன் என்றோ வேதாகமத்தில் கூறப்படவில்லை. இதற்கு எதிராக அறிவிக்கப்பட்டிருக்கிறது. "அந்தப்படியே நீதிமான் (பூரணமானவன்) ஒருவனாகிலும் இல்லை." "எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்." (ரோமர் 3:10, 23) முதலில் தகப்பன் ஆதாமில் காணப்பட்டது போல, யாரிடமும் தேவ சாயலின் மகிமை காணப்படவில்லை.

ஆபிரகாமின் பெரிய படிப்பினாலேயோ, அல்லது அவரது

ஆச்சரியமான அறிவின் சக்தியினாலேயோ ஆபிரகாம் தேவனிடத்தில் நண்பனாக இருக்கவில்லை. அவரது திறமைகள் எதுவும் அவர் தேவனிடத்தில் விசேஷித்த கிருபை பெறவும், உறவை பெறவும் செய்யவில்லை. இருந்த போதிலும் ஆபிரகாமிடம் அறிவின் சக்தி இருந்ததை நாம் காண்கிறோம். அவர் செல்வந்தனாக இருந்த உண்மை அவர் நல்ல மேலாளர் என்பதைக் குறிக்கிறது. அவர் மனிதர்களின் திறமையான தலைவர் என்பதும், படைப்பெருந்தலைவர் என்பதும், கெதர்லாகோமேரும் அவனோடிருந்த ராஜாக்களும் லோத்தையும், சோதோமியர்களையும் அவர்களது பொருட்களையும் எடுத்துச் சென்றபோது காண்பிக்கப்பட்டது. ஆபிரகாம் தனது வேலைகாரர்கள் நூற்றிபதினெட்டு பேரை தன்னுடன் அழைத்துச் சென்று அவர்களை பின் தொடர்ந்து கொள்ளைப்பொருட்களை மீட்டுக் கொண்டு வந்தார்.

ஆனால் இது ஆபிரகாமின் படைத்தலைமை திறமையினாலோ அல்லது அவர் கொள்ளை பொருட்களுடனான தொடர்பினாலோ அல்லது அவரது பெருந்தன்மையினாலோ அல்ல, தேவன் ஆபிரகாமை நேசித்ததினாலேயாகும். தேவன் ஆபிரகாமை மதித்தற்கான விசேஷித்த குணம் ஆபிரகாமின் விசுவாசம் என்று வேதாகமத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருக்கிறது. "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்." அவன் தன் சொந்த கற்பனையை அல்லது மற்றவர்களது கற்பனையையோ அல்லது கனவையோ விசுவாசிக்கவில்லை.

### ஆபிரகாமின் பிள்ளைகள்

தேவனுடைய கருத்தின்படி, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இந்த விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்குமான ஆரம்ப சாட்சியம் மாம்சீக விருத்தசேதனம் ஆகும். இது பாவத்திலிருந்து திரும்புவதையும் தேவனிடத்தில் கீழ்ப்படிவதையும் ஆபிரகாமுக்கும் அவரது வித்திற்கும் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரர் ஆவதையும் மறைபொருளாக குறித்தது. விருத்த சேதனமானது யூதர்களின் சடங்காச்சாரமாக ஆனது. இந்த சடங்காச்சாரத்தில் சிறிது நம்பிக்கையுடனோ அல்லது நம்பிக்கை இல்லாமலோ இருந்தார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத விருத்த சேதனம் சர்வ வல்லவரின் விசேஷித்த கிருபைகளுக்கு உரிமையளிக்கவில்லை. ஆனால் ஆபிரகாமிடத்திலும் அவரிடம் செய்யப்பட்ட வாக்குத்தத்தங்களிடத்திலும் நம்பிக்கையுள்ள அனைத்து யூதர்களும் தெய்வீக கிருபைக்கும் வேதாகமத்தின் நமது புரிந்து கொள்ளுதலுக்கும் கீழ், தேவனுடைய ராஜ்யத்தை சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்போகிற மேசியாவின் கைகளில் தெய்வீக ஆசீர்வாதங்களை பெறுகிற குறிக்கப்பட்ட சாட்சியங்களாக சீக்கிரத்தில் இருப்பார்கள்.

அனைத்து உண்மையான கிறிஸ்தவர்களும், யூதர்களிலிருந்தோ அல்லது புறஜாதிகளிடமிருந்தோ வருகிறவர்கள், ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிறார்கள் என்று பரிசுத்த பவுல் விளக்குகிறார். மாம்சீக வாரிசுகள் பூமிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரர் ஆகிறது போல, இவர்கள் ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரர் ஆகிறார்கள். அது இன்னும் நிறைவேறவில்லை. ஆனால் சுபாவ வித்து புறஜாதிகளிலிருந்து பிரித்து காண்பிப்பதற்கு விருத்தசேதனத்தின் மேல் நம்பிக்கையை பராமரிப்பது போல ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததி இருதயத்தில் உண்மையான விருத்தசேதனத்தை பெற்றிருக்க வேண்டும் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். இருதயத்தில் உண்டாகும் இந்த விருத்தசேதனம் இன்னும் சக்தி வாய்ந்ததாக, உலகத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் பிரித்து, நற்காரியங்களில் வைராக்கியமுள்ள தேவனுடைய விநோதமான ஜனங்களாக காண்பிக்கிறது.

யூதர்களும், கிறிஸ்தவர்களும் தேவனிடத்தில் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும், நேர்மையும் விசுவாசமும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று புத்தி கூறுகிறோம். ஒரு வகுப்பார் பரலோக வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்; இன்னொரு வகுப்பார் பூமிக்குரிய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ள தயாராவார்கள். ஆனால் இவர்கள், ஆபிரகாமின் ஆவிக்குரிய பரலோகத்துக்குரிய வித்து முதலாம் உயர்த்தெழுதலில் மறுரூபம் அடைந்த பிறகே பூமிக்குரிய சுதந்தரத்தை பெறுவார்கள்.

R5170

## Abraham was Very Rich

# ஆபிரகாம் பெரும் செல்வந்தனாக இருந்தார்

*ஆதியாகமம் 13:1–18*

*"யேகோவாவின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைக் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." (நீதிமொழிகள் 10:22)*

தேவனுடைய விசேஷித்த கிருபைகளை அனுபவிப்பவர்களில் ஐசுவரியவான்கள் அநேகரில்லை, ஞானிகள் அநேகரில்லை, படித்தவர்கள் அநேகரில்லை, ஆனால் அவர்கள் இந்த உலகின் தரித்திரராகவும் விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் இருக்கிறார்கள் என்று வேதம் அறிவிக்கிறது. ஆனால் தேவன் ஐசுவரியவான்களுக்கு விரோதமாக தப்பெண்ணங் கொண்டிருக்கிறார் என்றும் அவர்கள் மோசடி செய்து செல்வத்தை சேர்த்தார்கள் என்றும் யாராவது முடிவு செய்தால் அது மிகப்பெரிய தவறாகும். தேவன் மனிதர்களை மதிக்கிறவர் அல்ல என்று இது நமக்கு போதிக்கிறது. ஒருவன் செல்வந்தனா அல்லது ஏழையா, படித்தவனா அல்லது படிக்காதவனா என்று தேவன் பார்க்காமல் அவனது இருதய நிலையை வைத்தே மதிக்கிறார். ஏழையானவர்களில் நல்லவர்களும் கெட்டவர்களும் இருப்பதுபோல ஐசுவரியவான்களிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள்.

ஆபிரகாம் குடும்பத்தில் இளைய மகனாயிருந்தும், அவரது தந்தை தேராகு மரித்தபோது, தந்தையிடம் மீதியிருந்த அனைத்து சொத்தையும், மனைவி சாராளின் (ஒன்று விட்ட சகோதரி) பங்கையும் சுதந்தரித்துக் கொண்டார். காலக்கிரம விவரம் இதை ஏற்றுக் கொள்ளுகிறது. ஆபிரகாமின் பெயர் அவரது சகோதரர்களில் முதலாவதாக சொல்லப்படுவதற்கு காரணம், அவர் மூத்தவர் என்பதினாலல்ல, முக்கியத்துவம் வாய்ந்ததினாலேயாகும்.

ஆபிரகாமின் செல்வச்செழிப்பு அதிகமானதற்கு காரணம் அவர் மேலிருந்த கர்த்தரின் ஆசீர்வாதம் ஆகும். அவர் தெய்வீக அழைப்பைப் பெற்று, தன் நாட்டைவிட்டு புறப்பட்டு சென்று கானானில் ஆடு, மாடு மேய்க்கிற நாடோடியாக இருந்தபோது,

அவரது ஆடுகளும் மாடுகளும் மிகவும் பெருகின. அவர் தேவனுடைய ஆசீர்வாதத்தின் கீழ் பெருஞ்செல்வந்தனாக இருந்தார். பழங்காலத்தில் தேவனுடைய ஊழியர்களாக இருந்த மற்றவர்களும் செல்வச் செழிப்பினால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். உதாரணத்திற்கு யோபு. எனினும் நமது பொன்னான வசனத்தை தற்காலத்திற்கு பிரயோகிக்கக் கூடாது. இந்த சுவிசேஷ யுகத்தில் அவரது பரிசுத்த ஜனங்கள் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்படுவது மிகவும் அரிதானது. இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும், சுவிசேஷ யுகம் முழுவதும் இப்பொழுதும் பரிசுத்தவான்கள் இவ்வுலக பொருட்களில் ஏழைகளாகவே இருக்கிறார்கள்.

தேவனுடைய நடத்தைகளில் ஏன் இந்த மாற்றம் என்று கேட்கலாம். வேத வாக்கியங்களின் பதில் என்னவென்றால், கிறிஸ்துவுக்கு முன் பழங்காலத்தில், மனிதர்களுக்குரிய தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றார்கள். ஆனால் கிறிஸ்துவின் காலத்திலிருந்து தேவனுடைய பரிசுத்தவான்கள் "கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக" இருக்கின்றனர். சீஷத்துவத்தின் நிபந்தனையே பூமிக்குரிய சலுகைகளையும், செல்வம் மற்றும் ஆசீர்வாதங்களையும் அர்ப்பணித்து, தேவனுடைய சுதந்தரரும் அவர்களது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உடன் சுதந்தரமும் ஆவதேயாகும்; பரலோக சுதந்தரத்தை பெற்று, மேசியாவின் ராஜ்யத்தில் பங்கு பெற்று கனம், மகிமை மற்றும் சாகாமையை பெறுவதாகும்.

தேவன் ஆபிரகாமை ஒரு நண்பனைப் போலக் கருதி பூமிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுத்து எதிர்கால வாழ்வில் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணினார். இயேசுவும் அவரது பின்னடியார்களும் தேவனால் பூமிக்குரியவர்களாக ஏற்றுக் கொள்ளப்படாமல், தற்கால வாழ்வில் பரத்துக்குரிய, ஆவிக்குரிய சலுகைகளையும் நம்பிக்கைகளையும், எதிர்கால வாழ்வில் ஆவிக்குரிய மகிமையையும் சாகாமையையும் – தூதர்களுக்கும் மேலாக – வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். இயேசுவை தலையாகக் கொண்ட குமாரர்களின் வீட்டாருக்கு தேவனுடைய கிருபை, அவர்கள் பெற்ற அனுபவங்களாகிய சோதனைகளிலும், துன்பங்களிலும், தண்டனைகளிலும், பூமிக்குரிய இழப்புகளிலும், பெருந்துன்பங்களிலும் அடிக்கடி வெளிப்படுத்தப்படுகிறது. இந்த உபத்திரவங்களெல்லாம் அவர்களுக்கு "மிகவும் அதிகமான கனமகிமையை உண்டாக்குகிறது." இப்படியாக "சத்திய வசனத்தை நிதானமாய் பகுக்கிறவர்களும்," பழங்கால பாத்திரவான்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் வேறுபடுத்தி பார்த்து, இயேசுவின் சீஷர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது, வேறானது என்பதை உணர்ந்தறிகிறவர்கள் மட்டுமே, வேதாகமத்தின் அழகையும் இசைவையும் புரிந்து கொள்ளக்கூடும்.

## ஆபிரகாமின் நண்பர்கள் உடன் சுதந்தரர் அல்ல

ஆபிரகாமின் மூத்த சகோதரன் ஆரானின் மகன் லோத் ஏறக்குறைய ஆபிரகாமின் வயதுடையவராக இருந்தான். அவர்கள் நண்பர்களாகவும் தோழர்களாகவும் இருந்தனர். வாக்குத்தத்தங்களை பெறவும், அவைகளை நிறைவேற்றுவதற்கு வழியாக இருக்கும்படியும் லோத்தையோ அல்லது ஆபிரகாமின் மற்ற உறவினர்களையோ தேவன் அழைக்காமல் ஆபிரகாமை மட்டுமே அழைத்தார். இது லோத்தை தனது சித்தப்பா ஆபிரகாமுடன் இருக்க தடை செய்யவில்லை. ஆனால் உண்மையிலேயே ஆபிரகாமின் காரியங்களை வழிகாட்டிய தெய்வீக கிருபைகளின் ஆசீர்வாதங்களில் பங்குபெற அனுமதித்தது. தேவனுடைய உடன்படிக்கையும் ஆசீர்வாதங்களும் லோத்தோடு அல்ல, ஆபிரகாமுடன் மட்டுமே செய்யப்பட்டன. இதுபோல ஆபிரகாமின் ஆவிக்குரிய பிள்ளைகள் மட்டுமே ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரராகிறார்கள், அவர்களது நண்பர்களோ உறவினர்களோ அல்ல. எனினும் இவர்கள் அவர்களோடு இணைந்திருப்பதால் எதிர்நிழல் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் பங்கு பெறுகிறார்கள்.

கிறிஸ்துவும் அவரது அர்ப்பணம் செய்த சீஷர்களும் ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரர் என்று குறிப்பாக பரிசுத்த பவுலால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (கலாத்தியர் 3:29) அவர்கள் அனைவரும் ஆபிரகாமைப் போல விசுவாசமும், அவரைப் போல கீழ்ப்படிதலின் ஆவியும் உடையவர்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து அவர்களது தலையாகவும், வழிகாட்டி மற்றும் தலைவராகவும், இரட்சகராகவும் இருக்கிறார். அவருடையதைப் போன்ற ஒரு பலியின் உடன்படிக்கையினால் அவருடைய சீஷர்கள் ஆனார்கள். அவர் அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தமாவது: "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்." இந்த ராஜ்யம், ஆபிரகாமிடமும், யூதர்கள் மற்றும் புறஜாதியார்களிடமும் தேவன் செய்த கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

## செல்வம் அடிக்கடி துன்பத்தை வருவிக்கிறது

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களில் லோத்தும் பங்கு பெற்றான், பண ஆசையும் சச்சரவும், இவர்களிடையே அல்ல, அவர்களது வேலைக்காரர்களிடையே பிரிவினைக்கு வழி நடத்தியது. ஆபிரகாம் சமாதானத்தை விரும்பி, இரு குடும்பங்களும் பிரிந்துவிடுவது நல்லது என்று உணர்ந்தார். லோத் சம்மதித்தான். தேசத்தின் பகுதியை லோத்தின் விருப்பத்திற்குவிட்டார். லோத் மிகவும் செழிப்பான பகுதியாகிய யோர்தானுக்கு அருகான சோதோமின் சமபூமி முழுவதையும் தெரிந்து கொண்டான். பிறகு கர்த்தரால் அது அழிக்கப்பட்டது. அது இப்பொழுது சவக்கடலின் படுகையாக இருக்கிறது.

லோத் சோதோமிலே தனது கூடாரத்தைப் போட்டான். அவனது ஆடு, மாடுகள், சுற்றிலுமுள்ள செழிப்பான பகுதிகளில் மேய்ச்சலைப் பெற்றன. இதை லோத்தின் மனைவிதான் தெரிவு செய்திருக்க வேண்டும். அவள் ஒரு அழகான வீட்டை விரும்பினாள். சோதோமின் சுற்றுப்பகுதிகள் அவளை மிகவும் கவரக்கூடியதாக இருந்தன. அவனது குடும்பம் மூன்று வருடம் அங்கே வசித்தது. ஆனால் அந்த தேசத்தின் செல்வம் அழிவுக்குரியதாக இருந்தது. லோத்தின் நீதியான ஆத்துமா விரக்தியடைந்து, தனது மனைவியின் விருப்பத்திற்காக அங்கே அவன் பொறுத்துக் கொண்டு வாழ்ந்தான். அந்த தேசம் அழியும்போது அவள் பின்னிட்டு பார்த்து உப்புத்தூண் ஆனாள், அவளது கணவனும் இரண்டு குமாரத்திகளும் தப்பினார்கள்.

மாறாக, ஆபிரகாம், தற்காலத்தில் குறைவானதும் எதிர்காலத்தில் அதிகமானதுமான தேவனுடைய கிருபையான வாக்குத்தத்தங்களின் மேல் தனது நம்பிக்கையையும் இருதயத்தையும் வைத்தான். சாராள் அவரது மனைவி, உண்மையான தோழியாக இருந்து தனது கணவனின் நம்பிக்கை மற்றும் விருப்பத்தில் பங்கு பெற்று அவற்றின் நிறைவேறுதலுக்காக அவருடன் உண்மையாக உழைப்பவளாக இருந்தாள். இந்த இரு குடும்பத்திலும், அவர்களது நோக்கம், தெய்வீக அனுமதியை பிரதானமாக தேடுவதிலும், பூமிக்குரிய நலன்களை பிரதானமாக தேடுவதிலும் உள்ள வித்தியாசத்தை நாம் காண்கிறோம்.

லோத் செய்த அதே தவறுகளை இன்றைக்கு அநேக கிறிஸ்தவ ஜனங்கள் செய்கிறார்கள். அவர்கள் அனுமதிக்கிற பூமிக்குரிய நன்மைகள் அவர்களை தேவனுடைய மகா கிருபையின் ஆசீர்வாதங்களிலிருந்து பிரிக்கிறது. இப்படியாக அவர்களது இருதயம் நீதியை தேர்ந்தெடுக்கும்போது அவர்களும் அவர்களது குடும்பமும் தீமையின் கண்ணியில் விழுகிறார்கள்.

ஆண்டவரின் புத்திமதி நினைவுகூரப்பட வேண்டும். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள்." இந்த குறிக்கோளுக்கு இசைவாக கிரியைகளை நடப்பித்து, பூமிக்குரிய தேவைகளை தேவனுடைய பொறுப்பிலும் மேற்பார்வையிலும் விட்டுவிட வேண்டும். அவர் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமான பாடங்களையும் அனுபவங்களையும் கொடுப்பார். தேவனுடைய புத்திமதிகளை பின்பற்றுகிறவர்கள், உலகம் கொடுக்க முடியாததும், எடுத்துப் போட முடியாததுமான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் காண்கிறார்கள். "எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை" காண்கிறார்கள்.

### தேவனுடைய ஆசீர்வாதம் செல்வந்தனாக்குகிறது

ஒருவர் பெற்றிருக்கிற உலகப் பொருட்களைக் காட்டிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமே உண்மையான செல்வமாகும். சமாதானத்தையும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டுவராத செல்வம் இருந்து என்ன பயன்? நாம் எங்கே போனாலும் எல்லோரும் செல்வந்தராயிருந்தாலும் ஏழையாக இருந்தாலும் சந்தோஷத்தையும், களிப்பின் ஊற்றுகளையும் தேடுகிறதைக் காண்கிறோம். இவர்களில் சிலராவது அதைக் கண்டார்களா! ஐயகோ! கர்த்தரின் ஆசீர்வாதமே சந்தோஷங்களுக்கும் செல்வத்திற்கும் உண்மையான மூலதனமாக என்றென்றைக்கும் அமைகிறது என்கிற மாபெரும் உண்மையை உலகம் புரிந்து கொள்ளக் கூடாததாக காணப்படுகிறது! அதுவும் இது இந்த ஜீவியத்தைக் காட்டிலும் வருங்காலத்திற்குரியதாக இருக்கிறது.

கர்த்தர் தமது வாக்குத்தத்தங்கள் மற்றும் கிருபை தமது வழிநடத்துதல் மற்றும் ஆசீர்வாதத்தினாலும் ஐசுவரியவான்களாக ஆக்குகிறவர்களே சந்தோஷத்தை பெறுகிறார்கள், மற்றவர்கள் அதை வீணாக தேடுகிறார்கள். இந்த சுவிசேஷ யுகத்தில் இந்த உண்மையான ஐசுவரியங்கள் "கேட்கும் காதுள்ளவர்கள்" மற்றும் தேவனுடைய கிருபையை தெரிந்து கொள்கிறவர்கள் அனைவரும் பெறக்கூடியதாக இருக்கின்றன. தெய்வீக ஞானம், அன்பு மற்றும் வல்லமை ஆகிய பொக்கிஷம் அனைத்தும் கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது.

விசுவாசம் மற்றும் தங்களது வாழ்க்கையை கிறிஸ்துவின் ஊழியத்திற்காக அர்ப்பணம் செய்வதின் மூலம் அவருடைய சீஷர்களாகிறவர்கள் மட்டுமே தற்காலத்தில் இந்த ஆசீர்வாதங்களில் ஒரு பங்கை பெறக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்னும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் ஆரம்பிக்கவிருக்கிற அவரது ஆயிரம் வருட ஆளுகையில் உலக மனுக்குலத்திற்காக வழங்கவிருக்கிற திரும்ப கொடுத்தலின் ஆசீர்வாதங்களும் அவரிடத்தில் இருக்கின்றன. இதெல்லாம், "உலக தோற்ற முதல் பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைக்கப்பட்ட" உண்மையை குறிப்பிட்டு பரிசுத் பேதுரு நமக்கு கூறுகிறார். (அப்போஸ்தலர் 3:19–21)

ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கை லேசாக மாறுபட்ட முறைகளில் அநேகந்தரம் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்றுதான் இன்றைக்கு கொடுக்கப்பட்டுள்ள பாடத்தின் பகுதியாக இருக்கிறது. இதுதான் அடுத்த வாரம் நமது பாடத்தின் தலைப்பாக இருக்கும். நாம் இங்கே அதன் மேற்கோளை மட்டும் காட்டியிருக்கிறோம். இது பரலாகத்திற்குரிய வாக்குத்தத்தம் அல்ல, பூமிக்குரிய ஒன்றே என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும்"- பூமிக்குரிய வாக்குத்தத்தம்; "உன் சந்ததியை பூமியின் தூளைப்போல பெருகப்பண்ணுவேன்"- இது பூமிக்குரிய ஜனங்களுக்கானது. இதற்கு முற்றிலும் வேறான வாக்குத்தத்தங்களை, ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததிக்கு சம்பந்தப்பட்டதை அடுத்த வார பாடத்தில் நாம் காண்பிக்கப் போகிறோம்.

**R5172**

## The Cost of Discipleship
## சீஷத்துவத்தின் விலைக்கிரயம்

*"வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு சகிக்கிறோம்." 1 கொரிந்தியர் 4:12*

தேவன்தாமே அன்பாயிருக்கிறபடியால், அவர் தமது ஜனங்களுக்கு கொடுத்துள்ள மிக உயர்ந்த சீரிய பரிபூரணம் அன்பின் திட்ட அளவாக இருக்கிறது. இதற்கு மேலான திட்ட அளவை நாம் கற்பனை செய்ய முடியாது, அதற்கு மேலாக யாரும் அடைய முடியாது. அது விசேஷித்த குணலட்சணமாக இருக்கிறது. இது இல்லாமல் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பின் பரிசை யாரும் பெற இயலாது. பரிபூரணத்தின் இந்த அடையாளம் நமது கர்த்தரில் முத்திரையிடப்பட்டது. பிதாவின் சித்தத்தை எல்லா வகைகளிலும் செய்ய விரும்பமுள்ளவராயிருந்தார்; ஆதாமின் பாவத்தினால் மரண தண்டனைக்குட்பட்டிருந்த அனைவருக்காகவும் தமது ஜீவனை கொடுக்கவும் விருப்பமுள்ளவராக இருந்தார்.

எனினும் பரிபூரண அன்பின் இந்த எல்லையை அடைய அவருக்கு ஓட தேவையிருக்கவில்லை. ஏனெனில் அவர் எப்பொழுதும் "பரிபூரணராகவும் பரிசுத்தராகவும்

குற்றமற்றவராகவும் பாவிகளுக்கு விலகினவராகவும்'' இருந்தார். (எபிரேயர் 7:26) மாறாக சபையானது ஆதாமினால் வந்த விழுந்து போன சுபாவத்தையும், இயற்கையாகவே அபூரணத்தையும் உடையதாக இருக்கிறது. ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் நமது பாவ கறைகளை எல்லாம் கழுவப்பட்டவர்களாக இருக்கிறோம். பரிபூரண அன்பின் எல்லையை நாம் படிப்படியாக அடைவோம். முதலாவது நாம் இருதய எண்ணத்தில் பூரணத்தை முதலாவது அடைவோம். அதன் பிறகு நீதியில் நமது குணம் உருவம் பெறுவதற்கான அனுபவங்களை கடந்து செல்வோம். இந்த அனைத்து சோதனைகள் மற்றும் துன்பங்களில் தேவனுடைய பரிசுத்த சித்தங்களை நாம் எப்பொழுதும் செய்பவர்களாக இருப்பதை விளங்கப்பண்ண வேண்டும்.

தேவன் எதிர்பார்க்கிற திட்ட அளவில் நாம் இல்லை என்பதை உணர்ந்தும் கூட, இந்த அன்பின் குணத்தை நமது கர்த்தராகிய இயேசுவில் நாம் பார்க்கிறதினால் நாம் அதை மதிக்கிறோம். இருந்த போதிலும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக நாம் எல்லாவற்றிலும் பூரண அன்பை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது நமது மகா விருப்பமாக இருக்கிறது. நாம் இருதய எண்ணத்தில் பூரணத்தை அடைந்த பிறகு, இதை அடைவதற்கான சோதனை இனி நமக்கு இராமல் நமது குணம் உருவம் பெறுவதற்கான சோதனையே இருக்கும். அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: ''சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க வேண்டும்.'' பூரண அன்பிற்கு மேலாக நாம் முன்னேறமாட்டோம். ஏனெனில் தேவன் ஒருவரிடத்தில் செய்யப்பட வேண்டும் என்கிற விருப்பத்திற்கு மேலாக யாரும் செய்ய முடியாது. அவர் ஐந்து வருடம் வாழ்ந்தாலும் சரி, ஐம்பது வருடம் வாழ்ந்தாலும் சரி, அதற்கு மேல் அவரால் செய்ய இயலாது. பரிபூரண அன்பே அவரிடம் எதிர்பார்க்கப்பட்ட எல்லையாக இருக்கிறது. இதற்கும் மேலான எல்லையை அவரால் அடைய முடியாது.

ஒருவர் அன்பின் எல்லையில் நிற்கும் போது, சோதனைகள் அவரை இன்னும் பலப்படுத்துகிறது. விரோதம், பொறாமை, கோபம் மற்றும் சண்டை போன்றவைகளில் நம்மை தூண்டும்படியான அனுபவங்களை நாம் அடிக்கடி கடந்து செல்கிறோம். இந்த சோதனைகளினால் நாம் மேற்கொள்ளப்பட்டு, பூரண அன்பின் நிலைமையிலிருந்து நாம் விழுந்து போவோமானால், நமது ஓட்டத்திற்கான பரிசை இழந்துவிடுவோம். (பிலிப்பியர் 3:14) இப்படியாக விழுந்துபோகிறவர்கள், அபிவிருத்திக்காக திரள் கூட்டத்திற்குள் செல்வார்கள். ஆனால் அனைத்து அன்பையும் அவர் இழப்பாரானால், அவர் இரண்டாம் மரணத்திற்குள், செல்வார். இந்த இரண்டு காரியங்களிலும் பூரண அன்பின் எல்லையிலிருந்து கீழே சென்றுவிடுகிறார். இந்த பூரண அன்பின் அளவுதான், தேவனை முதன்மையாக நேசிக்கிறவர்களுக்கு தேவன் வைத்திருக்கிற மகிமையான காரியங்களில் பங்குபெற்று ராஜ்யத்தில் இருக்க விரும்புகிறவர்களுக்கு இருக்க வேண்டிய அன்பின் திட்ட அளவாகும்.

## உதாரகுணமும் தருமசிந்தனையுமே தேவனுடைய ஜனங்களின் குணம்

விழுந்து போன நிலைமையின் மனோபாவத்தையும், பலவீனத்தையும் மேற்கொள்கிற மனச்சார்பை தமது அடியார்களிடம் காணவும் தமது அடிச்சுவட்டை பின்பற்றவும் நமது கர்த்தர் விரும்புகிறார். அவரைப்பற்றி இப்படியாக எழுதப்பட்டுள்ளது: ''கிறிஸ்துவும் நமக்காக பாடுபட்டு, நாம் அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியை பின்வைத்துப் போனார்... அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்...'' (1 பேதுரு 2:21,23) வையப்படுவது என்பது இழிவாக காணப்படும்படி செய்வது, தீயவைகளை பேசுதல் என்பது அவதூறு பேசுவது ஆகும். அநீதியில் கோபங் கொள்வதும், தீமைக்கு தீமை பேசுவதும் நாம் பெறுவதற்கு ஏற்ப நன்மை செய்வதும், முடிந்தால் கொஞ்சம் அதிகமாக நன்மை செய்வதும் அனைவரது சுபாவமாக இருக்கிறது. நாம் விழுந்துபோன நிலையிலும் மனதில் சமநிலையற்றும் இருப்பதால் இது இயற்கையான சுபாவமாக இருக்கிறது.

நமது கர்த்தரின் போதனைகள் அனைத்தும் தூற்றுகிற ஆவிக்கு எதிராகவே இருக்கிறது. நாம் எந்த அளவுக்கு நாம் தூற்றப்படுகிறோம் என்பது முக்கியமல்ல, திருப்பி நாம் வையக் கூடாது. நாம் எந்த அளவுக்கு துன்பப்படுத்தப்பட்டாலும், நாம் பதிலுக்கு செய்யக் கூடாது. இதுதான் புது சிருஷ்டியின் பிரமாணம். நாம் திருப்பி வைவதற்கு பதிலாக, ஆசீர்வதிக்க வேண்டும். ஒருவர் நம்மை வையும் பொழுது, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக என்று நாம் சொல்ல வேண்டும் என்பது இதன் பொருளல்ல. ஆனால் அந்த மனிதர் துன்பத்தில் இருந்து உதவி தேவைப்படும் போது, அவர் நமக்கு செய்த அனைத்துதையும் ஒதுக்கிவிட்டு, மற்றவர்களுக்கு உதவ தயாராயிருப்பது போல இவருக்கும் உதவ தயாராயிருக்க வேண்டும்.

இந்த உதாரகுணம் மற்றும் தரும சிந்தனையின் ஆவியே கர்த்தருடைய ஜனங்களின் ஆவியாக இருக்க வேண்டும். தீயவைகளை பேசி, நம்மை துன்பப்படுத்தினவர்களுக்கு, நன்மை செய்தும், அவர்கள் நம்மை தவறாக புரிந்து கொண்ட நிலைமையை விளக்கியும் நாம் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைத்ததில் அவர்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வர உதவி செய்வதின் மூலம் அவர்களை ஆசீர்வதிக்க வேண்டும்.

நமது கர்த்தரின் மார்க்கத்தையும் நமது அனுபங்களுக்கும் கர்த்தரின் அனுபவங்களுக்கும் உள்ள ஒற்றுமையை கவனிப்பதின் மூலம் நமது விசுவாசம் அதிகமாக பலமடைகிறது. நமது கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் யூத விசுவாச வீட்டாரினால் துன்பப்படுத்தப்பட்டார்கள். முழு யூத தேசமும் தேவனுடைய பிள்ளைகளாக வெளியரங்கமாக அறிவிக்கப்பட்டவர்கள். நமது கர்த்தரும் அவர்களை தமது சொந்தமானவர்களாக அங்கீகரித்தார். ''அவர் தமது சொந்தமானதிலே வந்தார்'' என்று எழுதப்பட்டுள்ளது. (யோவான் 1:11) ஆனால் அவர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவரை துன்பப்படுத்தி சிலுவையிலும் அறைந்தார்கள். பிற்பாடு அவரது அப்போஸ்தலர்களையும் அவர்களது பின்னடியார்களையும் துன்பப்படுத்தினார்கள்.

விசுவாச வீட்டார் துன்பப்படுதலையே பிரத்தியேக உரிமையாக பெற்றிருந்திருக்கிறார்கள். சுவிசேஷ யுக முழுவதும் தேவனுடய பிள்ளைகளாக தங்களை

வெளிப்படுத்திக் கொண்டவர்கள் மற்றவர்களை துன்பப்படுத்தினார்கள். கத்தோலிக்கர்களும் புரட்டஸ்டண்ட் சபையாரும் ஒருவரையொருவரும், யூதர்களையும் மற்றும் தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய ஜனங்களையும் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். அதிகப்படியான துன்பங்களை கொடுத்தவர்கள் தங்களை தேவனுடைய பிள்ளைகளாக வெளிப்படுத்திக் கொள்பவர்களே. அவர்களில் பெரும்பாலோர் தங்களை அவ்விதமாக நினைத்திருந்தார்கள்.

இன்றைக்கும் கூட அப்படிப்பட்ட துன்பங்களே இருக்கின்றன. தங்களை கர்த்தருடைய ஜனங்கள் என்று வெளிப்படுத்திக் கொண்டவர்களிலிருந்தே அவர்கள் வருகிறார்கள். இதற்கு இசைவாக வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "என் நாமத்தினிமித்தம் உங்களைப்பகைத்து உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்." (ஏசாயா 66:5) இந்தக் கூற்று சத்தியத்தில் அனுதாபம் இல்லாத நமது சொந்த குடும்ப அங்கித்தினர்களுக்கும் பொருந்தும். தங்களை கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படுத்திக்கொள்ளுகிற நமது குடும்ப அங்கத்தினர்கள் மூலமாகவே வழக்கமாக துன்பங்கள் வருகின்றன. அவர்களது எதிர்ப்பு சொந்த காரணங்களுக்காக அல்ல, போதனைகளின் காரணத்தினாலேயே ஆகும். துன்பப்படுத்தப்படுகிறவர்கள் பார்க்கிற அதே வெளிச்சத்தில் அவர்கள் பார்ப்பதில்லை.

இது, தங்களை துன்பப்படுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும், அவர்களை தேவனுடைய பிள்ளைகள் அனுதாபத்துடன் பார்க்கச் செய்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்வதாக நினைத்துக் கொண்டு கொடுமைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை நிகழ்வுகள் மூலம் ஞாபகத்திற்கு கொண்டு வருகிறோம். கர்த்தராகிய இயேசுவை துன்பப்படுத்தினவர்கள் அவரை யார் என்று அறியாமலேயே செய்தனர். அப்போஸ்தலர் பேதுரு கூறுகிறதாவது: "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச் செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்." (அப்போஸ்தலர் 3:17) பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைய மாட்டார்களே." (1 கொரிந்தியர் 2:8) தர்சு பட்டணத்தானாகிய சவுல் பரிசுத்த ஸ்தேவானையும் ஆதி திருச்சபையின் மற்றவர்களையும் துன்பப்படுத்தினபோது, தான் தேவனுடைய ஊழியத்தை செய்ததாக நினைத்ததை அவரே அதன்பிறகு நமக்கு சொல்கிறார். (அப்போஸ்தலர் 26:9–11)

## சத்தியத்தின் மேலுள்ள விசுவாசமே துன்பத்திற்கு ஒரு காரணம்

சுவிசேஷ யுகம் முழுவதும் தேவனுடைய சத்தியத்திற்கு உண்மையாக இருந்தவர்கள், "ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கி" வந்திருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையை புரிந்து கொண்டவர்களை புறம்பாக்குவதற்கு மனிதர்களுடைய விசுவாசக்கோட்பாடே தடையாக இருந்திருக்கிறது. மதபேதமுள்ளவன் என்று கருதி அநேகரை சபை நீக்கப்பட்ட காலம் ஒன்றிருந்தது. இவர்களில் ஒரு கிறிஸ்தவ சகோதரனாகிய மைக்மேல் சேர்வடஸ் ஒருவராவார். கழுமரத்தில் அவரது பயங்கரமான மரணம் ஜான் கேல்வின் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. இந்த காரியங்கள் எல்லாம் வேதவாக்கியங்களின்படி சரியாக நிறைவேறியது. "அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்கு புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களை கொலை செய்கிறவன் தான் தேவனுக்கு தொண்டு செய்கிறவனென்று நினைக்கும் காலம் வரும்." (யோவான் 16:2)

ஜெப ஆலயங்களின் பொறுப்பாளர்கள் எப்பொழுதுமே கெட்டவர்கள் அல்ல. தர்சு பட்டணத்தானாகிய சவுல் புருஷர்களையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய் காவலில் போட்டதுபோல அவர்கள் தவறாக புரிந்து கொண்டிருந்தார்கள். (அப்போஸ்தலர் 8:3) அதே நிலைமையே இப்பொழுதும் இருக்கிறது. இருளானது ஒளியை வெறுக்கிறது. யாராவது ஒருவர் தேவனுடைய வார்த்தைகளினால் அறிவு பெறும் போது, இப்படியாக சொல்லப்படுகிறார்கள்: "நீங்கள் எங்களோடு இருந்தால் இந்த காரியங்களை எல்லாம் சொல்லக் கூடாது." தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் இப்படியாக ஜெப ஆலயத்துக்கு புறம்பாக்கப்படுகிறார்கள்.

நமது நாட்கள் விநோதமானவை. மற்ற நாட்களைப் போல அல்ல. தெய்வீக திட்டம் அதன் வெளிச்சத்தில் அவ்வளவு அழகாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம். மற்றவர்கள் இருளில் இருக்கிறார்கள். தேவனுடைய சத்தம் மனசாட்சியின் சத்தம், அறிவு ஒளியின் சத்தம் தேவனுடைய ஜனங்களை பாபிலோனை விட்டு வெளியே வரும்படி அழைக்கிறது. அது தேவனுடைய குணலட்சணத்தையும் திட்டத்தையும் வார்த்தைகளையும் தவறாக அறிவிக்கிறது. நமது சத்துருக்களை பழிவாங்கும் உணர்வுக்கு வருவதற்கு பதிலாக, அவர்களுக்காக அனுதாபத்தை உணரவேண்டும். அவர்களுடன் அல்ல, அவர்களுக்காக அனுதாபத்தை உணர வேண்டும். நமது கர்த்தரின் நாட்களில் யூதர்கள் இருந்தது போலவே இவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் தாங்கள் செய்வது இன்னது என்பதை அறிந்திருப்பார்களானால், அவர்கள் தாங்கள் நடப்பித்த காரியங்களுக்காக வெட்கப்பட்டு போயிருப்பார்கள்.

இந்த காலத்தின் துன்புறுத்துதல் சரித்தின் வேறு எந்த காலத்தையும்விட வேறானது. அநேக உண்மையுள்ள கர்த்தரின் அடியார்கள் தேவனுடைய வார்த்தைகளில் விசுவாசமாக இருந்தபடியால் கண்டனத்திற்கும் அவதூறுக்கும் ஆளானார்கள். கர்த்தரை பேசியதைப் போல அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களையும் தீமையான வார்த்தைகளில் பேசுவார்கள் என்று தேவனுடைய வார்த்தை நமக்கு உறுதிப்படுத்துகிறது. அவரது வார்த்தைகளை நமது மனதில் வைத்துக் கொண்டு, அவரது ஊழியர்களாக மேன்மை பெற்றிருக்கிற அளவுக்குத் தக்கதாக அவரது உண்மையான அடியார்களுக்கு விரோதமாக தவறான குற்றச்சாட்டுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்வார்களானால் நாம் ஆச்சரியப்படக்கூடாது.

"என்னிமித்தம் பலவிதமான தீமையான மொழிகளை உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்கள்" (மத்தேயு 5:11) என்ற நமது கர்த்தரின் எச்சரிக்கை உண்மையான கிறிஸ்தவர்களை அவதூறாக பேசுகிறவர்கள், "நீங்கள் கிறிஸ்துவின் அடியார்களாக இருப்பதினால் அவரினிமித்தம் இவைகளை நாங்கள் உங்களுக்குச் செய்கிறோம்" என்று கூறுவார்கள் என பொருள்படாது. இப்படியாக யாரும்

துன்புறுத்தப்பட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை. ஆகையால் இப்படிப்பட்ட ஒரு மார்க்கம் நமது கர்த்தர் கூறியதின் பொருளாக இருக்க முடியாது. நமது கர்த்தரின் அடியார்கள் அவரைப்போல மதிப்பிற்குரியவர்களாக, நிதானமானவர்களாக, உண்மையுள்ளவர்களாக, நேர்மையானவர்களாக, நற்குணமுள்ளவர்களாக, தெளிந்த புத்தியுள்ள ஆவியை உடையவர்களாக இருந்ததால் பேரளவான மதத்தினால் அதிகமாக மதிக்கப்பபெற்றார்கள். தேவனுடைய வார்த்தைகளுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்ததினால் அவர்கள் துன்புறுத்தப்படவில்லை என்பதே அவர் கூறியதின் பொருள். உண்மையுடன் பலரும் அறிந்த அவர்களது தப்பறைகளை சுட்டிக் காட்டுவதாலும் சத்தியத்தின் மேலுள்ள விசுவாசத்தினாலுமே பேர் சபைகளில் பிரசித்தி பெற்றவர்களால் வெறுக்கப்படுகிறார்கள் என்பதே அதன் பொருளாகும்.

## பொன்னான கட்டளையே கிறிஸ்தவர்களுக்கு ஒரு சோதனை

பொன்னான கட்டளையை கிறிஸ்தவ சபை மக்கள் அனுசரிக்கிறார்களா என்று இந்த நிபந்தனைகளே சோதித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் குரோதம், பகைகள், சண்டைகள், எதிர்ப்புகள் ஆகியவற்றின் மூலம் தீமையான மொழிகளை பேசும்போது, இந்த கட்டளையின் கீழ் தங்களையே கண்டனம் செய்து கொள்ளுகிறார்கள். ஏனெனில் வதந்தி மூலமாகவோ இட்டுகட்டிய பொய்கள் மூலமாகவோ அல்லது குரோதத்தின் மூலமாகவோ மற்றவர்கள் தங்களைப்பற்றி தீமையாக பேசுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள்.

இந்த துன்புறுத்துதல்களையும், எதிர்ப்புகளையும் முழுமனதோடு சகிப்பதற்கு விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களா என்று கர்த்தருடைய ஜனங்களை இந்த நிபந்தனைகள் சோதிக்கக் கூடியதாக இருக்கின்றன. இது கிறிஸ்துவின் சீஷர்களாக இருப்பதற்கான விலையின் ஒரு பகுதியாக இருக்கிறது. அழுத்தத்தின் காரணமாக அவர்கள் திருப்பி வைதாலோ, தூற்றினாலோ அல்லது புறங்கூறினாலோ, அவர்கள் இராஜ்யத்தின் ஒரு இடத்திற்கு தகுதியற்றவர்கள் என்பதை இப்படியாக வெளிப்படுத்துகிறார்கள். அதாவது இந்த பாடங்களை அமைதியுடனும் நீடிய பொறுமையுடனும் அவர்கள் பெற்றுக் கொண்டால் இப்படியாக தங்களது இரட்கரின் குணலட்சண சாயலில் அதிகமாக அபிவிருத்தி அடைந்து எதிர்கால மகிமையில் உடன் சுதந்தரராவதற்கு பாத்திரராவார்கள்.

“நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” என்ற நமது கர்த்தரின் அறிவிப்பானது அவரது போதனைகளை கவனித்து அவரது குணலட்சண சாயலை அபிவிருத்தி செய்கிற அவரது சீஷர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அப்பு என்பது அழிவை தடுக்க உதவுகிறது. அதுபோல இந்த உண்மையுள்ளவர்களும் பாதுகாக்கிறவர்களாக இருக்கிறார்கள். பூமி கிறிஸ்துவின் முதலாம் வருகையின் காலத்தில் சீர் கேட்டிலும் அழியும் நிலையிலுமிருந்தது. ஆனால் கிறிஸ்துவின் சரீர அங்கங்களிலிருந்து பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவ தேசங்கள் என்று அழைக்கப்படுகிறவர்களிடத்தில் இந்த செல்வாக்கு இன்னும் இருக்கிறது.

இன்றைக்கும் கூட மகா இரட்சகரின் அர்ப்பணம் செய்த உண்மையான விசுவாசிகள் மிகக் குறைவாக இருந்த போதும், இரட்சகரின் போதனைகளின் சாரம் உலகின்மேல் ஒரு பரந்த செல்வாக்கை பெற்றிருக்கிறது. அது இல்லாததிருந்தால் சந்தேகத்திற்கிடமில்லாமல் நாசமும் முழுமையான அழிவும் வெகு காலத்திற்கு முன்பே வந்திருக்கும். அப்படியிருந்தும், ஊழலும் ஊழலின் செல்வாக்கும் எல்லா இடங்களிலும் கிரியை செய்கிறது. இந்த கூற்றின் உண்மையை நாம் அதிகமதிகமாக உணருகிறோம். கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கம் திரைக்குப்பின்னால் சென்ற பின்பு உப்பின் சாரம் போய்விடும். பிறகு களங்கமானது வெகு சீக்கிரத்தில் பிடித்துக் கொண்டு அதன் விளைவாக யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் உண்டாயிராத ஆபத்துக் காலம் உண்டாயிருக்கும். (மத்தேயு 24:21; தானியேல் 12:1)

முற்றிலும் கர்த்தருக்கு சொந்தமான அவருடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள், அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார் என்கிற உண்மையை வேதவாக்கியங்கள் குறிப்பிட்டு கூறுகின்றன. (ஏசாயா 63:9) தர்சு பட்டணத்தானாகிய சவுல் ஆதிகால சபையை துன்பப்படுத்திக் கொண்டிருந்தபோது, தமஸ்குவுக்கு போகிற வழியிலே கர்த்தர் அவனை கூப்பிட்டு, “சவுலே, சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய் என்று கேட்டார். அதற்கு அவன், ஆண்டவரே, நீ யார் என்றான். அதற்கு கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார்.” (அப்போஸ்தலர் 9:4,5) சவுல் மகிமையடைந்த கர்த்தரை நேரடியாக துன்பப்படுத்தவில்லை. இயேசுவின் சீஷர்களைத்தான் சவுல் துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். புது சிருஷ்டியை அல்ல, மாம்சத்தை மட்டுமே. அதிலிருந்து அவருடைய சீஷர்களுடைய மாம்சத்தை தமது மாம்சமாக ஏற்றுக் கொள்கிறார் என்று அறிந்து கொள்ளுகிறோம். சபையானது, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. (கொலோசெயர் 1:24)

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராயிருக்கும்படி தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சபையை, சுவிசேஷ யுகம் முழுவதும் உலகமானது துன்பப்படுத்திக் கொண்டிருக்கிறதை அது அறியாதிருக்கிறது. (ரோமர் 8:17) பிற்காலத்தில் மனுக்குலத்தின் கண்கள் திறக்கப்படும்போது, தாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை உணர்ந்து அவர்களது நடத்தைக்காக வெட்கப்பட்டுப் போவார்கள். தர்சு பட்டணத்தானாகிய சவுல், தான் தேவனுக்கு விரோதமாக போராடினதை கண்ட பிறகு, அவனுடைய வாழ்க்கை முறை மாறிப்போனது.

## பாளயத்துக்கு வெளியே எரித்ததின் உண்மைப்பொருள்

நமது கர்த்தர் மாம்சத்தில் துன்பப்பட்டது போல அவரது சரீரமாகிய சபையின் அங்கங்களும் துன்பப்படுவார்கள். (எபேசியர் 1:22, 23) “இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியினால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக தரித்துக் கொள்ளுங்கள்” என்று கூறி நம்மை இதை எதிர்பார்க்கும்படி அறிவுரை கூறுகிறார். (1 பேதுரு 4:1) துன்பப்பட்டது மாம்சமேயன்றி புது சிருஷ்டியல்ல.

மாம்சத்தில் நாம் துன்பப்படும்போது, நாம் ஆவியிலும் அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறோம்.

சங்கீதம் 44:22 இல் நாம் வாசிக்கிறதாவது: "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம்." இந்தக் கூற்று, கர்த்தராகிய இயேசுவை தலையாகக் கொண்டிருக்கிற கிறிஸ்துவின் அங்கங்கள் முழுவதற்கும் பொருந்தக்கூடிய ஒரு தீர்க்கதரிசனமாக இருக்கிறது என்று பரிசுத்த பவுல் காண்பிக்கிறார். (ரோமர் 8:36) அந்த நாள் பாவநிவாரண நாளின் உண்மைப் பொருளாகிய சுவிசேஷ யுகத்தைக் குறிக்கிறது. (2 கொரிந்தியர் 6:2) நிழலான பாவ நிவாரண நாளில் நிழலான பலிகள் செலுத்தப்பட்டது போல, சுவிசேஷ யுகம் முழுவதும் "விசேஷித்த பலிகள்" செலுத்தப்பட்டு வருகின்றன. (எபிரேயர் 9:23; 13: 11–13) இந்த "மேலான பலிகள்" நமது கர்த்தரில் ஆரம்பித்து சபையாகிய அவரது சரீரத்துடன் தொடர்கிறது.

உண்மையான பலியானது நமது கர்த்தரின் அர்ப்பணிப்பில் ஆரம்பித்தது. அது தேவனிடம் அவரது ஜீவனின் முழு அர்ப்பணிப்பாக இருந்தது. பிதாவானவர் தமது சித்தத்தின்படி அவரை பயன்படுத்திக் கொள்ளலாம். சபையானது அவரது அடிச்சுவட்டை பின்பற்றுகிறது. நமது அர்ப்பணிப்பு என்பது உலகத்திற்கு மரித்ததாகவும், நமது பூமிக்குரிய நம்பிக்கைகள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் மரித்ததாகவும் இருக்கின்றன. நமது கர்த்தரின் விஷயத்தில் தியாக மரணம் என்பது போதித்தல், குணப்படுத்துதல் முதலியவைகளில் அவரது சரீர பலத்தை இழப்பது மாத்திரமல்ல, அவரைச் சுற்றியுள்ளவர்களினால் வரும் எதிர்ப்புகளினால் வரும் துன்பத்தையும் அனுபவிப்பதாகும். அவர் தமது சொந்த குடும்ப அங்கத்தினர்கள் மூலமாகவும் தொல்லைகளை அனுபவித்தார். எனவே அனுதினமும் இயேசு மரித்தார்.

நமது பரம பிதாவினிடத்தில் வைத்திருக்கிற நமது விசுவாசத்திற்கு ஏற்றபடியும், நமது அர்ப்பணிப்பின் நிபந்தனைகளுக்கு ஏற்றபடியும் நாளும் இப்படிப்பட்ட அனுபவங்களை பெறுவோம். நமது பலியின் உடன்படிக்கையில் நமது உண்மைத் தன்மையானது உலகம், மாமிசம் மற்றும் பிசாசிடமிருந்து எதிர்ப்பை கொண்டு வரும். குறிப்பாக நமது துன்புறுத்தலானது போதுமான அளவுக்கு அபிவிருத்தி அடையாத கிறிஸ்தவர்களிடமிருந்தே வரும்.

பரிசுத்த பவுல் தனது சொந்த காரியத்தைப்பற்றி பேசும்போது, தான் அனுதினமும் சாகிறதாக கூறுகிறார். (1 கொரிந்தியர் 15:31) கர்த்தரின் ஊழியத்தில் தனது ஜீவனை அர்ப்பணிக்கிற அனைவருக்கும் இந்த கூற்று பொருந்தும். சில சமயங்களில் தனது உடல் பலத்தை செலவிடுதினால் வரும். சில சமயங்களில் தனது நாவினால் நமக்கு தீங்கிழைக்கிற, காயப்படுத்துகிற, புண்படுத்துகிற சிலரால் வருகிறது. இந்த அனுபவம் நிழலில் பாளையத்துக்கு புறம்பே மாமிசத்தை எரிப்பதின் மூலம் குறிப்பிடப்படுகிறது. பாளையமானது நாடுகடத்தப்பட்ட ஒரு நிலைமையை நிழலாக காட்டுகிறது.

நமது கர்த்தர் முன்னுரைத்தது போல, கர்த்தரின் உண்மையுள்ள ஊழியர்கள் உலகத்தினால் ஒதுக்கி வைக்கப்படுவார்கள். (மத்தேயு 24:9; யோவான் 16:1–3) பிதாவின் சித்தத்திற்கு தங்களை முழுவதுமாக அர்ப்பணித்த அவர்களது மனோபாவம் சரியாக உணரப்படாது. ஏனெனில் உலகத்திற்கு அது முட்டாள்தனமாக தோன்றும். இது ஒரு கண்டனமாக இருக்கிறது. நமது கர்த்தர் கூறுகிறதாவது: "பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதப்படிக்கு ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறான்." (யோவான் 3:28)

மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருப்பது பலியின் உடன்படிக்கையின் ஒரு நிபந்தனையாக இருக்கிறது. சில சமயங்களில் மரணமானது சீக்கிரம் வரலாம்; மற்றவர்களுககு தாமதமாக வரலாம். பரிசுத்த ஸ்தேவான் மரணபரியந்தம் உண்மையுள்ளவராயிருந்தார். கிறிஸ்தவ அனுபவத்தில் அவருக்கு மரணமானது சீக்கிரம் வந்தது. பரிசுத்த பேதுருவும் உண்மையுள்ளவராக இருந்தார். ஆனால் அவருக்கு மரணம் நீண்ட காலத்திற்கு பிறகே வந்தது. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்: "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." (வெளிப்படுத்தல் 2:10) "அவரோடு கூட பாடுகளைச் சகித்தோமானால், அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்." (தீமோத்தேயு 2:12)

## R 5177 Abraham's Age on Entering Canaan

# கானானில் நுழைந்ததுபோது ஆபிரகாமின் வயது

வேதாகம பாடங்கள், தொகுதி IIஇல் கொடுக்கப்பட்டுள்ள காலக்கணக்கில், ஆபிரகாம் கானானுக்குள் நுழைந்தபோது அவரது வயது முதலானவைகளில் தவறு காணப்படுவதாக அநேக கடிதங்களை நாங்கள் பெறுகிறோம். இவர்களுக்காகவும் இதே சங்கடத்தில் இருக்கும் மற்றவர்களுக்காகவும் தொகுதி IIஇல் பக்கம் 44–47இல் (தமிழில் பக்கம் 35–38) கொடுக்கப்பட்டுள்ளவைகளை இங்கே விரிவாக பார்க்கிறோம்.

தேராகு மரிக்கும் போது அவருக்கு வயது இருநூற்றைந்து என்று ஆதியாகமம் 11:32 கூறுகிறது. அவர் மரித்தபின்பு ஆபிரகாம் கானானுக்கு சென்றதாக அப்போஸ்தலர் 7:4 கூறுகிறது. ஆபிரகாம் ஆரானை விட்டு புறப்பட்டபோது எழுபத்தைந்து வயது உள்ளவனாயிருந்தான் என்று ஆதியாகமம் 12:4 கூறுகிறது. அப்படியானால் ஆபிரகாம் பிறக்கும் போது தேராகுவின் வயது நூற்று முப்பதாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் இது, "தேராகு எழுபது வயதானபோது, ஆபிரகாம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்" என்று ஆதியாகமம் 11:26 கூறுவதற்கு இசைவாக இல்லையா? இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். இங்கே குழப்பம் என்னவென்றால், மூத்தவனாகிய ஆரான் கடைசியாகவும் இளையவனாகிய ஆபிரகாம் முதலாவதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதேயாகும். இந்த வருணையில் ஆபிரகாம் முக்கியத்துவம் வாய்ந்தவராக இருந்ததே இதற்கு காரணம். ஏற்ற காலத்தில் கர்த்தரால் வழிநடத்தப்படுவதற்கு இது ஒரு சிறிய தடுக்கலின் கல்லாக இருக்கலாம்.

தேராகுவின் பிள்ளைகளில் ஆரான் என்பவர் மூத்தவன் என்பது பதிவு செய்யப்பட்ட உண்மைகளில் மிகவும் தெளிவாக இருக்கிறது. ஆரானின் மகனாகிய லோத், சித்தப்பாவாகிய ஆபிரகாமுக்கு தோழனாக இருப்பதற்கு ஏற்ற வயதுடைய வனாயிருந்தான். லோத்தும் ஆபிரகாமும் ஒருவேளை ஒரே வயதுடையவர்களாக இருக்கலாம். இருவருக்கும் ஆடுகளும் மாடுகளும் மேய்ப்பர்களும் இருந்தனர். சோதோம் அழிக்கப்பட்ட போது லோத்துக்கு இரண்டு குமாரத்திகள் திருமண வயதில் இருந்தனர். மற்றவர்கள் முன்னரே திருமணமாகியிருந்தனர். இது ஈசாக்கு பிறப்பதற்கு முன்பு ஆகும். அப்பொழுது ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதுடையவராயிருந்தார். (ஆதியாகமம் 17:24; 18:1, 16; 19:8, 14)

இன்னும், தேராகுவின் மகன்களில் ஆரான் மிகவும் மூத்தவனாக இருந்தான், நாகோர் இரண்டாவதாக இருந்தான். இப்படியாக, நாகோர் தனது சகோதரன் ஆரானின் குமாரத்திகளில் ஒருத்தியாகிய மில்க்காளை திருமணம் செய்திருந்தான். (ஆதியாகமம் 24:15) இவனது பேத்தி ரெபேக்காள், ஆபிரகாமின் மகன் ஈசாக்குக்கு மனைவியானாள். (ஆதியாகமம் 24:67)

ஆகையால், இரண்டாம் தொகுதியில் நாம் கொடுத்துள்ள காலக்கணக்கு அறியப்பட்ட எல்லா உண்மைகள் மூலமும் வேத வசனங்களின் சரியான கூற்றின் மூலமும் உறுதி செய்யப்படுகிறது.

**R 5177**

## The Oath - Bound Covenant

## ஆணையுடனான உடன்படிக்கை

ஆதியாகமம் 15:5–18

*“வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.” (எபிரேயர் 10:23)*

கர்த்தர், ஆபிரகாமிடம் தமது உடன்படிக்கையை பல்வேறு பதங்களில் எட்டு தடவை திரும்பக் சொன்னார். உடன்படிக்கையின் குறிப்புகள், அது அநேந்தரம் திரும்பச் சொல்லப்பட்டது மற்றும் தேவனுடைய ஆணை இணைக்கப்பட்டது அனைத்தும் விசேஷமாக ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நமக்கு என்று கூறி பரிசுத்த பவுல் நமது கவனத்தை ஈர்க்கிறார். “(சுவிசேஷத்தில்) நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையை (தேவன் ஓர் ஆணையினால் உறுதிப்படுத்தி ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவைகள்) பற்றிக் கெள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு... அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாக போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.” (எபிரேயர் 6:18, 19)

இந்த உடன்படிக்கை இன்னும் நிறைவேறவில்லை என்றும், கிறிஸ்தவர்களும், யூதர்களைக் காட்டிலும் குறைவாக அல்ல, உலகின் முழு மனுக்குலமும் அதன் நிறைவேறுதலில் மிகவும் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். ஏன் தேவன் ஆபிரகாமிடம் இந்த வாக்குத்தத்தத்தை திரும்பச் சொல்லி, ஈசாக்கு மற்றும் யாக்கோபிடம் உறுதிப்படுத்தினார் என்று நாம் ஆச்சரியப்படலாம். ஆனால் இந்த வாக்குத்தத்தை நாம் பார்க்கும்போது, சுருக்கமாக பார்க்கும்போது, ஓக் மரத்தின் கொட்டையைப்போல மனுக்குலத்திற்கான இரட்சிப்பு மற்றும் இழந்ததை திரும்ப பெறுவதற்கான தேவனுடைய முழு திட்டத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. தெய்வீக தனித்தன்மையை நமக்கு விளக்குகிறது. அப்போஸ்தலர்கள் சபைக்கும் உலகத்திற்குமான நம்பிக்கையைப் பற்றி கூறும்போது, ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை தொடர்ந்து குறிப்பிடுவது ஏன் என்பதையும் நமக்கு இது விளக்குகிறது.

வாக்குத்தத்தமானது ஆரம்பத்தில் ஆபிரகாமுக்கே கொடுக்கப்பட்டது: “உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் பார். நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்.” இஸ்ரயேலின் பிள்ளைகளை அந்த தேசத்திற்குள் தேவகிருபை வழிநடத்தினாலும், யோசுவா மூலமாக அந்த தேசம் சுதந்தரித்துக் கொள்ளும்படி கொடுக்கப்பட்டாலும், இது வாக்குத்தத்தத்தின் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை. இஸ்ரயேலர்கள் அந்த தேசத்தை நிரந்தரமாக பெற்றிருக்கவில்லை. பெலிஸ்தியர்கள், எகிப்தியர்கள், அசீரியர்கள், பாபிலோனியர்கள் முதலானவர்களின் கீழும், அநேக நூற்றாண்டுகளாக துருக்கியர்களின் கீழும் அது இருந்தது.

இப்போது அந்த தேசத்திலிருந்து கானானியர்களையும் அமலேக்கியர்களையும் துரத்திவிட்டார்கள் என்பதையும் ஆபிரகாமுடன் செய்யப்பட்ட இந்த ஆணையுடனான உடன்படிக்கையையும் தவிர வேறு எந்தவித உரிமையும் யூதர்களுக்கு அந்த தேசத்தில் இல்லை. (இந்த கட்டுரை 1913ல் இஸ்ரயேல் தேசம் சுதந்திரம் அடைவதற்கு 35 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்டது) ஆபிரகாமை புராண பாத்திரமாக எண்ணி மறுப்பவர்களும் தேவனையும் அவர் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையையும் நம்பாதவர்களுமான அறிவுள்ள அந்த யூதர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைக் கேட்பது எவ்வளவு முட்டாள் தனமாக இருக்கிறது! அது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவர்களது தேசமல்ல, வாக்குத்தத்தத்தை பற்றிக் கொண்டிருக்கிறவர்களைத் தவிர வேறு யாருக்கும் அது சொந்தமாகாது. (ரோமர் 4:11–14)

### ஆபிரகாமின் மூன்று மனைவிகளும் அடையாளமானவர்கள்

ஆபிரகாமும் அவரது மனைவிகளும் உண்மையாக இருந்தாலும், அவர்கள் அடையாளமாக இருக்கும்படி அவர்களது காரியங்கள் சர்வ வல்லவரால் அந்த அளவுக்கு மேற்பார்வையிடப்பட்டன. இப்படியாக ஆபிரகாம் தேவனுக்கு அடையாளமாகவும், ஈசாக்கு மேசியாவுக்கு அடையாளமாகவும், ஈசாக்கின் மனைவி ரெபேக்காள் சுவிசேஷ யுகத்தின் தெரிந்து கொள்ளப்பட்ட சிறுமந்தையாகிய சபைக்கும் முன்னடையாளமாக இருந்தார்கள். இந்த சபைக்கு தேவன், இரட்சகரின் இராஜ்யத்தில் இரட்சகரோடு உடன் சுதந்தரராயிருக்கும்படி கிருபை செய்திருக்கிறார். அவர் மூலமாக, ஆபிரகாமின் வித்தாக இருந்து பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (கலாத்தியர் 3:29)

ஆபிரகாம் தேவனுக்கு ஒரு நிழலாக இருந்ததால், அவரது மனைவிகளும் தேவனுடைய மூன்று உடன்படிக்கைகளுக்கு நிழலாக இருந்தார்கள். இந்த உடன்படிக்கைகளின் மூலமாக தேவனுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் சீக்கிரத்தில் வரும். சாராள் மலடாக இருந்தது போல ஆரம்ப, பிரதானமான தேவனுடைய உடன்படிக்கை நீண்ட காலமாக இயேசு கிறிஸ்து வரும் வரை பலனற்றதாக இருந்தது என்று பரிசுத்த பவுல் விளக்குகிறார். ஆகார் அடையாளமான மனைவியாகி, வாக்குத்தத்தத்தின்படியான வாரிசை பெற்றெடுக்க முயற்சித்து தோற்றுப்போனாள். இதில் ஆகார், சீனாய் மலையில் இஸ்ரயேலரோடு செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக இருந்தாள் என்று பரிசுத்த பவுல் அறிவிக்கிறார். இது பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்க திறமையுள்ள ஆபிரகாமின் உண்மையான வித்தை பெற்றெடுப்பதில் தோல்வியடைந்ததைக் குறிக்கிறது.

ஆகார் அடிமைப் பெண்ணாக இருந்தபடியால், அவள் நியாயப் பிரமாணத்தின் அடிமைத்தனத்தை அடையாளப்படுத்தினாள். அவளது மகனாகிய இஸ்மயேல், யூத ஜனங்களை அடையாளப்படுத்தினான். அவர்கள் தேவனுடன் உறவைப் பெற்றிருந்தார்கள், ஆனால் அடிமைத்தன உடன்படிக்கையின் பிள்ளையாக இருந்தார்கள். பிற்பாடு மலடாயிருந்த சாராள் வாக்குத்தத்தத்தின் மகனை பெற்றெடுத்தாள். பரிசுத்த பவுல் விளக்குவதுபோல, தேவனுடைய ஆதி உடன்படிக்கை ஏற்ற காலத்தில் உண்மையான வித்தாகிய இயேசுவை, மேசியாவை பெற்றெடுத்தது.

அப்போஸ்தலர், ‘‘சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்’’ என்று கூறியது போல இயேசுவின் அனைத்து சீஷர்களும் அவர்களது தலையானவரின் கீழ் ஒரே எண்ணிக்கையாக கணக்கிடப்படுகிறார்கள். இன்னொரு உருவகத்தில் இயேசு மணவாளனாகவும் அவரது சீஷர்கள் ஒரு மணவாட்டி கூட்டமாக சித்தரிக்கப்படுகிறார்கள். இந்த சித்திரம் ரெபேக்காளில் காட்டப்படுகிறது. ஈசாக்கின் மனைவியான அவள் அவனோடு ஆபிரகாமின் சொத்துக்களுக்கும் அவரது வித்துக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திற்கும் உடன் சுதந்தரவாளியானாள். நிழலில் ஈசாக்கின் விவாகத்திற்கு முன்னரே சாராள் மரித்துப்போகிறாள். இது, ஆபிரகாமோடு தேவன் செய்து கொண்ட ஆரம்ப உடன்படிக்கை மணவாளனும் மணவாட்டியும், தலையும் சரீரமுமாகிய முழுமையான மேசியாவை பிறப்பிக்கும்போது அதன் நிறைவை அடையும். இவர்கள் ஆபிரகாமின் வித்தாக இருந்து, இவர்கள் மூலமே சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## ஆபிரகாமுக்கு உண்டான அனைத்தும் ஈசாக்குக்கு கொடுக்கப்பட்டது

நிழலில் ஆபிரகாம் தனக்குண்டான யாவையும் ஈசாக்குக்கு கொடுத்தார். இஸ்மவேலுக்கும், மூன்றாவது மனைவியாகிய கேத்தூராளின் பிள்ளைகளுக்கும் நன்கொடைகளைக் கொடுத்தார். நிஜத்தில் தேவன் தம்முடையதை கிறிஸ்துவுக்கு, மேசியாவுக்கு சம்பூரணமாக கொடுத்தார். இவர் மூலமாகத்தான் தேவன் மாம்சீக இஸ்ரயேலருக்கும் பூமியிலுள்ள சகல வம்சங்களுக்கும் நன்கொடைகளைக் கொடுக்கிறார். இவர்கள் அனைவரும் நிஜமான ஈசாக்காகிய கிறிஸ்து மூலம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்.

சரியான பொருளில் ஆகார் நியாயப்பிரமாண உடன்படிக்கையையும், சாராள் இந்த சுவிசேஷ யுகத்தின் நமது உடன்படிக்கையையும் நிழலாக குறிப்பிடுகிறார்கள். சாராளின் மரணத்திற்கு பிறகு ஆபிரகாமுக்கு மூன்றாவது மனைவியாகி அநேகம் பிள்ளைகளைப் பெற்ற கேத்தூராள் புதிய உடன்படிக்கையை அடையாளப்படுத்தினாள். இந்த புதிய உடன்படிக்கை இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் சீக்கிரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று வேதாகமம் அறிவிக்கிறது. அந்த புதிய உடன்படிக்கையின் கீழ், ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய கிறிஸ்துவினால், மேசியாவின் ஆயிர வருட ஆளுகையில் பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும். இதுதான் மனுக்குலத்துக்கான தேவனுடைய அன்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழமாகும், அவர்களது எதிர்காலத்துக்கு கொடுக்கக் கூடிய அவரது நன்கொடையுமாகும்.

ஆபிரகாமிடம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் மோரியா மலையில் ஒரு பகுதியான ஆரம்பத்தை மட்டுமே பெற்றதாகவும், ஆபிரகாமின் உண்மையான வித்து இயேசுவில் ஆரம்பமானதாகவும் இப்படியாக காணப்படுகிறது. அவரது வாக்குத்தத்தத்தின்படி உலகத்தை ஆசீர்வதிக்கக் கூடிய உண்மையான வித்து இன்னும் நிறைவடையவில்லை. சீக்கிரத்தில் முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் இந்த ஆவிக்குரிய வித்து சீக்கிரத்தில் நிறைவடையும் என்பது நமது நம்பிக்கையாக இருக்கிறது. பிறகு சுபாவ மனிதனை – பொதுவாக உலகத்தை குறிக்கிற வாக்குத்தத்தத்தின் இரண்டாம் பகுதி நிறைவேற்றப்பட ஆரம்பிக்கும். ஏனெனில் அப்பொழுது ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்து, மேசியா வகுப்பார், திரைக்குப் பின்னால் மகிமையிலும் அதிகாரத்திலும் இருந்து ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்கள். பிறகு மேசியாவின் வல்லமையையும் அதிகாரத்தையும் பிரயோகம் பண்ண ஆரம்பித்து இப்படியாக உலகத்தை ஆசீர்வதிக்க ஆரம்பிப்பார்கள்.

வேத வாக்கியங்களின்படி மேசியாவின் ஆளுகை ஒரு ஆயிரம் வருட காலம் நீடிக்கும். சாத்தானை கட்டுவதும், பாவங்களை தடுப்பதும், அறியாமையையும் மூட நம்பிக்கையையும் அகற்றுவதும் மற்றும் பொதுவாக மனுக்குலத்திற்கு அறிவு புகட்டுவதும் அதன் பலனாக இருக்கும். அறிவு புகட்டும் அந்த செல்வாக்கினால். ‘‘சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.’’ ஒருவன் தன் அயலானை நோக்கி கர்த்தரை அறிந்து கொள் என்று கூற அவசியமிராது; ஏனெனில் அனைவரும் அவரை அறிந்திருப்பார்கள். அவர்களுக்கு அப்பொழுது கிடைக்கும் சலுகைகளையும் தெய்வீக ஏற்பாடுகளையும் புரிந்து கொண்டு மெச்சுவார்கள்.

அந்த ஆளுகையின் கீழ் உயிரோடிருக்கிறவர்கள் மாத்திரம் ஆசீர்வதிக்கப்பட்டு ஆரோக்கியத்திற்கும் பூரணத்திற்கும், நித்திய ஜீவனுக்கும் திரும்பிவராமல், கல்லறைகளில் உள்ள அனைவரும் எழுப்பப்பட்டு அதே போன்ற அறிவிற்கும் சலுகைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் வருவார்கள். இப்படியாகத்தான் ஆபிரகாம் காலத்திற்கு முன்பும் பின்பும் தேவனையும் அவரது மகிமையான ஏற்பாடுகளையும் அறியாதிருந்து மரித்துப்போன பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்.

## நட்சத்திரங்களைப் போலவும் மணலைப் போலவும்

ஆபிரகாமுக்கு நியாயப்பிரமாண இஸ்மயேலர்களையும் அல்லது ஆகார் உடன்படிக்கையையும் தவிர்த்து இரண்டு வித்துக்கள் இருக்கிறார்கள் என்பதை பிறகுதான் வேத மாணவர்கள் கண்டுணர்ந்தார்கள். "உன் சந்தி வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் இருக்கும்." வானத்து நட்சத்திரங்கள் என்பது, பூமியின் நிலைமையிலிருந்து வானத்து நிலைமைக்கும் மனித சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்துக்கும் மறுரூபமான, ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய கிறிஸ்துவும் அவரது சபையுமாகிய நம்மை சரியானபடி குறிக்கிறது. கலாத்தியர் 3:29இல் குறிப்பிடப்பட்ட சுதந்தரர் இவர்களே. பரிசுத்த பவுல் மறுபடியும் இவர்களைப் பற்றி, "மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" என்று குறிப்பிடுகிறார். (1 கொரிந்தியர் 15:41, 42)

ஆனால் தேவனுடைய மகிமையான திட்டம், சபையின் மகிமையடைதல் நிறைவேறும் போது தான் ஆரம்பமாகும். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் கடற்கரையின் மணலைப் போல, மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் தேவனுடைய உறவுக்குள் வருவதற்கு சலுகையளிக்கப்படுவார்கள். அப்பொழுது தெய்வீக ஏற்பாடுகளை தெரிந்தே, வேண்டுமென்றே ஏற்க மறுப்பவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். அப்பொழுது மேசியாவின் ராஜ்யத்தின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அதற்கு கீழ்ப்படிந்து வருகிறவர்கள் அனைவரும் படிப்படியாக பூரணத்திற்கு கொண்டுவரப்படுவார்கள். விசுவாசமும் கீழ்ப்படிதலும் தேவனால் அடையாளங்காணப்பட்டதால் அவர்கள் பூமிக்குரியவர்களாக, ஆபிரகாமின் மானிட வித்தாக, மானிட பூரணம் மற்றும் பூமிக்குரிய ஏதேனில் நித்திய ஜீவன் உடையவர்களாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

## ஆபிரகாமுக்கு தேவனுடைய ஆணை

ஓர் ஆணை அல்லது ஓர் ஒப்பந்தம் இதற்கு அடையாளமாக ஒரு மிருகத்தை இரண்டாக வெட்டி அவர்களுக்கு இடையே அனுப்புவது பழங்காலத்தில் செய்து வந்த ஒரு செயல் முறை என்று பேராசிரியர் டாட்ஸ் **(Professor Dods)** குறிப்பிட்டிருக்கிறார். தேவன், ஆபிரகாமுக்கும் அவரது சந்ததியினருக்கும் ஆபிரகாமையும், அவரது வித்தையும் ஆசீர்வதிக்கும் அவரது உடன்படிக்கை மீறப்படாது என்று கூறி அதிகபட்சமான உறுதிமொழியை கடைபிடித்தார். தீர்க்கதரிசனம் ஒன்று கொடுக்கப்பட்டது. அதாவது ஆபிரகாமின் சந்ததியார் எகிப்தின் அடிமைத்தனத்தில் நானூறு வருடங்கள் இருந்து பிறகு கொண்டு வரப்படுவார்கள்.

இஸ்ரயேலர்கள் நூற்றாண்டுகளாக தேசத்தை அவர்கள் பெற்றிருந்தும், தேவன் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தம், அதுவரை நிறைவேறவில்லை என்ற உண்மையை பரிசுத்த ஸ்தேவான் அனைத்து அப்போஸ்தரின் மனோபாவத்தை தனது குரலில் வெளிப்படுத்தினார். வாக்குத்தத்தம் கூறுகிறதாவது: தேசமானது ஆபிரகாமுக்கும் அவருக்குப் பிறகு அவரது வித்துக்கும் வர வேண்டும் என்பதாகும். ஆபிரகாம் தன் கால் வைத்த கானான் தேசத்தில் போதுமான இடத்தை உரிமை பெறவில்லை என்ற உண்மையை பரிசுத்த ஸ்தேவான் குறிப்பிட்டார். மேசியாவும் அவரது மணவாட்டியும் ராஜ்யமாக மகிமைப்படுத்தப்பட்ட பிறகு, ஆபிரகாம் மரித்தோரிலிருந்து வந்து, தேசத்தை சுதந்தரித்துக் கொண்டு தன் சந்ததியினருக்கும் அதை வழங்குவார் என்று பரிசுத்த ஸ்தேவான் விவேகத்துடன் கூறினார். ஆனால் நாம் பார்த்திருக்கிற நிஜமானது பெரிதாக இருக்கும். ஏனெனில் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக தேவனுடன் ஒருமித்து வருகிறவர்கள் அனைவருக்கும் முழு உலகமும் தேவனுடைய பரதீசாகவும் கானான் தேசமாகவும் இருக்கும். அவர்களும் ஆபிரகாமின் வித்தாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

**R 5178**

# Hope for the Sodomities
# சோதோமியர்களுக்கான நம்பிக்கை

ஆதியாகமம் 19:12-17, 23-29

*"நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு, பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (2 கொரிந்தியர் 6:17)*

ஆபிரகாம் தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தபோது, சுமார் கி.மு. 1900இல், எபிரோனிலே குடியிருந்தார். அங்கே கர்த்தரும் இரண்டு தூதர்களும் மனிதர்களைப் போல அவருக்கு தோன்றினார்கள். ஆபிரகாம் அவர்களை அறியாமல் உபசரித்து விருந்து கொடுத்தார். அவர்கள் புசித்துவிட்டு ஆபிரகாமோடே பேசினார்கள். பரிசுத்த பவுல் இதை கவனித்து, கர்த்தருடைய பிள்ளைகள் அந்நியரை உபசரிக்க வேண்டும் என்று தூண்டுகிறார். மேலும் அவர் ஆபிரகாம் அறியாமல் எப்படி தேவதூதரை உபசரித்தார் என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறார். (எபிரேயர் 13:2)

இதில் கர்த்தர் என்று அழைக்கப்பட்டவர் சந்தேகத்திற்கிடமில்லாமல் யேகோவா தேவனின் பிரதான தூதனாகிய (லோகாஸ்) வார்த்தையானவராகும். இவர்தான் மனிதனின் இரட்சகராகவும் இழந்ததை திரும்ப கொடுக்கும்படியாகவும் மாம்சமானார். இந்த சமயத்தில் கர்த்தர் ஆபிரகாமிடம், இஸ்மயேல் வாக்குத்தத்தத்தின்படியான சுதந்தரராக இருக்க மாட்டான் என்றும் சாராள் தனது முதிர்ந்த வயதிலும் சீக்கிரத்தில் ஒரு குமாரனை பெறுவாள் என்றும் கூறினார். அடுத்த வருடத்தில் ஈசாக்கு பிறந்தார்.

ஆபிரகாம் தூதர்களான பார்வையாளர்களுடன் கொஞ்சதூர இடைவெளியில் நடந்து, அவர்கள் யார் என்பதையும், சோதோமின் அழிவு உடனடியாக நடக்க கூடியது என்பதையும் தெரிந்து கொண்டார். வாக்குத்தத்தத்தின் சுதந்தரர் பெருந்தன்மையாக சோதோமியர்களிடம் இரக்கம் காண்பிக்கும்படி தேவனிடம் விண்ணப்பம் பண்ணினார். அங்கே ஐம்பது பேரோ, நாற்பது பேரோ, இருபது பேரோ அல்லது பத்து பேரோ நீதிமான்கள் இருந்தால் அந்த பட்டணத்தை அழிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். தேவனும் பத்து நீதிமான்கள் அங்கே இருந்தால் அதை அழிப்பதில்லை என்று உறுதிமொழி கொடுத்தார்.

## சோதோமின் அக்கிரமம் பெரிதாயிருந்து

பாவம் மற்றும் மரணத்தின் இந்த ஆளுகையின் காலத்தில் மனுக்குலமே தங்களை தங்களது சுய அரசாங்கம் மூலமாக ஆளுகை செய்ய முயற்சிக்க அனுமதிப்பது தேவனுடைய கொள்கையாக இருந்திருக்கிறது. பாவங்கள் எல்லை மீறும்

போதும், ஜீவிய சலுகைகளை தனக்கும் பிறருக்கும் தீங்கிழைக்கும் வகையில் அனுபவிக்கும் போதும் மட்டுமே தேவன் குறுக்கிட்டு அழிவை ஏற்படுத்துவார். “அக்கிரமக்காரர் அனைவரையும் தேவன் அழிப்பார்” என்கிற ஒரு பெரிய பாடத்திற்கு சோதோமியர்கள் மற்றும் பழமைவாதிகளை தேவன் எடுத்துக்காட்டாக ஆக்கினார்.

எனினும் இவைகள் நித்திய ஆக்கினைக்கு எடுத்துக்காட்டாக இல்லாமல் அழிவுக்கே எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதையும் அவர்கள் மரிக்க வேண்டிய சில வருடத்திற்கு முன்னதாகவே அழிக்கப்பட்டார்கள் என்பதையும் நினைவில் வைக்க வேண்டும். மேலும் ஆதாம் ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து ஆதாமின் இனத்தார் அனைவரும் மரண தண்டனைக்குக் கீழாக இருக்கின்றனர் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும்.

மேலும், இயேசு கிறிஸ்து, தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார் என்பதையும் அவருக்குள்ளாக பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். பாவம், மரணம் மற்றும் பரம்பரையான பலவீனத்தின் கீழ் உள்ள ஆதாமின் பிள்ளைகள் அனைவரும் இறுதியாக, கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தினால் கல்லறையிலிருந்து எழுந்து வருவார்கள் என்பது இதன் பொருளாகிறது. அந்த பலி நம்மில் யாரையும் சேர்த்துக் கொள்வதை போல சோதோமியர்களையும் சேர்த்துக் கொள்ளும் என்பதை இந்த பாடம் காண்பிக்கும்

## “நீதிமானாகிய லோத் இரட்சிக்கப்பட்டான்”

லோத் அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் சோதோமின் பாவத்தைக் குறித்து வருத்தப்பட்டான் என்று அப்போஸ்தலர் பேதுரு நமக்கு கூறுகிறார். (2 பேதுரு 7,8) அவரது குடும்பத்தில் எல்லோரும் பெண்களாக இருந்தார்கள். இருவரைத் தவிர மற்றவர்கள் சோதோமியர்களோடு கலப்பு திருமணம் செய்யவிருந்தார்கள். தனது இரு குமாரத்திகளையும் செல்வந்தராயுள்ள மாப்பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுத்து சோதோமிலேயே குடியிருக்க லோத்தின் மனைவி எண்ணங் கொண்டிருந்தாள். லோத் மற்றும் அவனது மனைவியைப் போல எவ்வளவு பேர் அறிவுப்பூர்வமான மற்றும் நீதி சம்பந்தமான காரியங்களைக் காட்டிலும் சரீர மற்றும் லௌகீக சம்பந்தமான நன்மைகளுக்காக பெரிய தவறுகளை செய்திருக்கிறார்கள்! லோத் அவனது மனைவி மற்றும் அவனது திருமணமாகாத இரு குமாரத்திகள் ஓடிப்போகிற காரியத்தைக் குறித்து நமது பாடத்தில் எளிமையாக சொல்லப்பட்டிருக்கிறது.

சோதோம் மற்றும் கொமோரா கடந்த காலத்தில் சவக்கடலின் பகுதியாக இருந்தது. அது வாயு, எண்ணெய் மற்றும் ஆஸ்பால்ட் **(Asphalt)** போன்றவை ஆழமான பிளவுகளுடன் இருந்து பாதாள அக்கினிக்கு வழிநடத்தியது என்று புவியியல் வல்லுனர்கள் அறிவிக்கிறார்கள். இது ஒரு பூமியதிர்ச்சி அல்லது மின்னலின் ஓட்டத்தினால் இணைப்பு ஏற்பட்டு சோதோமுடைய அழிவு நிகழ்ந்திருக்க வேண்டும் என்று விவரிக்கப்பட்டது. எரிகிற எண்ணெய் மற்றும் ஆஸ்பால்ட்டை வாயுவானது காற்றுக்குள் தூக்கியெறிந்து அக்கினி மழை மற்றும் கந்தகத்தை, மரண பயங்கரத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் தீப்பற்றக் கூடிய பொருட்கள் அங்கு இல்லாதிருந்தால் இதே விளைவை, அழிவை தேவன் வேறு ஒரு முறையில் ஏற்படுத்தியிருப்பார்.

லோத் ஆபிரகாமுக்கு உறவினனாயிருந்ததினிமித்தமே தேவனுடைய இரக்கம் லோத்திடம் இருந்தது என்று 29வது வசனம் அறிவிக்கிறது. இந்த கருத்து வேதாகமத்தின் அனைத்து கூற்றுகளுக்கும் ஒத்திருக்கிறது. ஆதாமுடைய கீழ்ப்படியாமையினாலே அவனது முழு இனமும், மரண தண்டடைக்குள்ளாக்கப்பட்டது. ஆகவே தேவ நீதியானது அவர்களில் யாருக்கும் எந்தவித கடமையும்பட்டிருக்கவில்லை. ஆபிரகாம் தனது விசுவாசம், உண்மைத் தன்மை, மற்றும் கீழ்ப்படிதலை மெய்ப்பித்தப் பிறகு, தெய்வீக இரக்கம் ஆபிரகாமுடன் ஒரு விசேஷித்த கிருபையின் உடன்படிக்கைக்குள்ளாக நுழைந்தது.

ஆனால் அந்த உடன்படிக்கையானது அவரது வித்தைத் தவிர வேறு யாருக்கும் நீட்டிக்கப்படவில்லை. லோத், ஆபிரகாமின் உறவினனாக இருந்தினால் மட்டுமே தேவன் அவன்மேல் கிருபை காண்பித்தார் என்ற கூற்றைத் தவிர, லோத் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக கவனிக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தவித காரணமும் இல்லை.

## தேவனுடைய இரக்கத்தில் விசாலம்

தேவன் நம் இனத்தின்மேல் இரக்கமற்றவராக இருக்கிறார் என்பதை இது குறிக்கவில்லை. ஆனால் ஒரு வழியை ஏற்படுத்தி அதன் மூலமாக அவரது இரக்கத்தை அப்பியாசப்படுத்துவார் என்பதைக் குறிக்கிறது. முன் தீர்மானிக்கப்பட்ட வழியின் மூலமாக அப்பியாசப்படுத்துவார்.

தேவனுடைய அனைத்து இரக்கங்களுக்கும் வழி கிறிஸ்து இயேசு ஆகும். அவர் கூறுகிறதாவது: “என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.” அவரைக் குறித்து பரிசுத்த பேதுரு கூறினதாவது: “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.” (அப்போஸ்தலர் 4:12) இயேசு –வினாலன்றி இரட்சிப்பு இல்லை என்பதால், இயேசு வருவதற்கு முன் யாரும் இரட்சிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. சிலருக்கு இது முதலில் ஆச்சரித்துக்குரியதாக காணப்படுகிறது. இதுதான் வேதாகமத்தின் தெளிவான போதனை என்பதையும், இது தான் தேவனுடைய ஆச்சரியத்தக்க கிருபையை திறக்கும் சாவி என்பதையும் அவர்கள் உணரும் வரை ஆச்சரியமாக இருக்கும்.

இதற்கு ஆதாரமாக, இயேசு மூலமாக, மனுக்குலத்திற்கு தேவன் அனுப்பியிருக்கிற இரட்சிப்பைக் குறித்த பரிசுத்த பவுலின் வார்த்தைகளை கவனியுங்கள். அவர் கூறுகிறதாவது; “முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதிப் பண்ணப்பட்ட இரட்சிப்பு.” (எபிரேயர் 2:3) மேலும் நாம் வாசிக்கிறதாவது: “இயேசு, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்.” (2 தீமோத்தேயு 1:10)

ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் மூலம் வருகிற ஆசீர்வாதத்தைக் குறித்த அறிவிப்பை ஆபிரகாமும் எபிரேயர்கள் அனைவரும் பெற்றிருந்தார்கள். ஆனால் அறிவிப்பு என்பது ஒன்று, ஆசீர்வாதமானது வெறொன்று. ஜனங்களின் ஆசீர்வாதம் ஆபிரகாமின் வித்தினால் வரும் என்று வாக்குத்தத்தம் கூறினது. (கலாத்தியர் 3:16, 29) அதற்கு முன்னால் அது வர இயலாது. பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தர்களாகிய ஆபிரகாம், மோசே, தாவீது மற்றும் பிறரும் பரலோகம் சென்றுவிட்டார்கள், மனுக்குலத்தின் மற்றவர்கள் நித்திய ஆச்சினைக்கு சென்றுவிட்டார்கள் என்ற எண்ணத்தை நமது மனதிலிருந்து நீக்க வேண்டும். நல்லவர்கள் மற்றும்

கெட்டவர்களாகிய பழைய ஏற்பாட்டு காலத்தின் ஜனங்கள் தங்கள் பிதாக்களோடு சேர்க்கப்பட்டு, அவர்களோடு நித்திரைக்குச் சென்றார்கள். ஆபிரகாமின் வித்து எப்பொழுது நிறைவடையும் என்றும், பாவம் மற்றும் மரணத்தின் அனைத்து வல்லமைகளையும் நீக்கிப்போட்டு பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை எப்பொழுது ஸ்தாபிக்கும் என்றும் மற்றும் கல்லறைச் சிறையிலிருந்து அனைத்து கைதிகளும் எப்பொழுது விடுதலை அடைவார்கள் என்றும் காத்துக்கொண்டு இன்னும் அவர்கள் நித்திரையிலிருக்கிறார்கள்.

### முதலாவது அல்லது பிரதானமான உயிர்த்தெழுதல்

நமது கர்த்தராகிய இயேசுவில் ஆரம்பித்த முதலாம் உயிர்த்தெழுதல் இன்னும் நிறைவடையவில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் பலியின் மரணத்தில் பங்கு பெறவும், அவரது தெய்வீக சுபாவத்தின் மகிமையான உயிர்த்தெழுதலில் பங்கு பெறவும் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையுள்ள மணவாட்டி வகுப்பார் இன்னும் நிறைவடையவில்லை. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்கள் ஆயிரம் வருடம் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வார்கள் என்றும், ஆபிரகாமின் வித்து முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டு, கல்வாரியின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட அனைவரையும் ஆசீர்வதிப்பார்கள் என்றும் வேதாகமம் அறிவிக்கிறது. (வெளிப்படுத்தல் 20:4)

இதை பரிசுத்த பவுல் எபிரேயர் 11:38 – 40 இல் அழுத்திக் கூறுகிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் இதர பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்கள் தேவ கிருபையை பெறுவார்கள் என்கிற அறிவிப்பை பெற்றபொழுதும், அந்த கிருபை கிறிஸ்து மூலமாகவே வரும் என்று அவர் அறிவிக்கிறார். அதன் காரணமாக, ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகிய கிறிஸ்துவின் சரீரம் நிறைவடையாமல், அவர்கள் மாமிசத்தில் பூரணத்தையும் நித்திய ஜீவினையும் அடைய முடியாது. ''அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு...'' ''பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை'' (யோவான் 3:13) என்று கூறினார். பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் பரலோகம் போகவில்லை என்று இயேசுவும் சாட்சியம் அளிக்கிறார். ''தாவீது தீர்க்கதரியின் விஷயத்தில் அக்கறை காட்டி, பரிசுத்த பேதுரு, ''தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை'' என்று அறிவிக்கிறார். (அப்போஸ்தலர் 2:34)

### சோதோமியர்களுக்கான நம்பிக்கை

சோதோமியர்களின் நம்பிக்கை, ஆதாமின் சந்ததியினரில் மற்ற அனைவரின் நம்பிக்கையை போலவே இருக்கிறது. இதில் இந்த சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய வித்தாக கிறிஸ்துடன் உறவுக்குள் வந்திருக்கிற சிலர் மட்டும் விதிவிலக்கு. அகில உலகத்தாரின் நம்பிக்கை மேசியாவின் ராஜ்யமும் அதின் பலனால் கிடைக்கப்போகிற பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து விடுதலையுமே ஆகும். உலகத்தைப் பொருந்தவரை, ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, இரட்சிப்பின் வேலை ஆரம்பிக்கும். பரலோக நிலைமைக்கான சபைக்கான இரட்சிப்பு, பொதுவாக தேவன் உலகத்தாருக்கு வைத்திருக்கிறதிலிருந்து வேறானதாக இருக்கிறது. எனினும் கல்வாரியில் கொடுக்கப்பட்ட பலியே, எல்லாருக்கும் ஒரே பலியாக, நமது அனைவரின் நம்பிக்கைகளுக்கு அடிப்படையாக இருக்கிறது. நாம் அனைவரும் ஆதாமினால் மரண தண்டனைக்குள்ளாக இருந்தோம். ஜீவனுக்கு நீதிமானாக்கப்படுதல் இரட்சகரைத் தவிர வேறு யார் மூலமாகவும் வரமுடியாது.

நியாயத்தீர்ப்பின் நாளில் (மேசியாவின் ஆயிரம் வருட ஆளுகை) இயேசுவின் காலத்தில் அவரது செய்தியைக் கேட்டு மறுதளித்த கப்பர்நகூம், பெத்சாயிதா, கோரோசின் ஆகியவைகளின் ஜனங்களுக்கு நேரிடுவதைக் காட்டிலும், சோதோம், குமோரோவின் ஜனங்களுக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று இயேசு நமக்கு கூறுகிறார். (மத்தேயு 11:20–24) இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு நேரிடுவது தாங்க முடியாததாக இருக்காது. ஆனால் சோதோமியருக்கு நேரிடுவது அவர்களைக் காட்டிலும் இலகுவாயிருக்கும். ஏனெனில் அவர் விளக்குகிறதாவது: ''பலத்த செய்கைகள் சோதோமிலும் குமோரோவிலும் செய்யப்பட்டிருந்தால், அவர்கள் மனந்திரும்பியிருப்பார்கள்,'' அது அழிக்கப்பட்டிருக்காது.

இது நமக்கு சோதோமியர்களின் நித்திய மரணம் முடிவுக்கட்டப்படவில்லை என்பதை தெளிவாக காட்டுகிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலமாக தேவன் கொடுத்த வசனங்களை (எசேக்கியேல் 16:46–63) நாம் பார்க்கும்போது, சோதோமியர்கள் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்படுவது மாத்திரமல்ல, எழுப்பப்படும் போது தேவனைப்பற்றிய ஒரு அறிவுக்குள் கொண்டு வரப்பட்டு, விருப்பத்துடன் கீழ்ப்படிகிறவர்களுக்கு மேசியா மூலமாக நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்பதற்கு அபரிமிதமான சாட்சியங்களை நாம் பெற்றிருக்கிறோம்.

தேவனுடைய அன்பு விசாலமாயிருக்கிறது
மனித மனதின் அளவைக் காட்டிலும்;
நித்தியமானவரின் இதயமானது
கனிவாயிருக்கிறது மிகவும் அதிசயத்தக்கவிதமாக.

R 5180

## Abraham's Faith Tested
## ஆபிரகாமின் விசுவாசம் சோதிக்கப்பட்டது

ஆதியாகமம் 22:1–13

*''பலியை அல்ல இரக்கத்தையும், தகன பலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்.'' ஓசியா 6:6*

ஆபிரகாம், விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுவதற்கான காரணங்களில் ஒன்றை இன்றைய பாடம் நமக்கு கூறுகிறது. அவரது முழு வாழ்க்கைச் சரித்திரமும் விசுவாசமுள்ள வாழ்க்கையாக, தேவனிடத்தில் நம்பிக்கையுள்ள வாழ்க்கையாக, தெய்வீக வாக்குத்தங்களில் நம்பிக்கை உடைய வாழ்க்கையாக வரையப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் இன்றைக்கு பார்க்கிற பாடமாகிய கடைசி சோதனையானது பயங்கரமான தீவிரமான ஒன்றாக இருந்தது. தேவனுடனான ஆபிரகாமின் பரிச்சயம் வருஷக் கணக்காக பெருகும்போது அவரது விசுவாசம் மென்மேலும் பலமடைந்தது. நமது பாடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விசுவாசமானது நம்மை ஆச்சரியப்பட வைக்கும் அளவுக்கு பெரிதாக இருக்கிறது. சர்வ வல்லவரோடு அதிக நெருக்கமான பழக்கமும் அனுதாபமும், நம்பிக்கையும் உடைய ஒருவர் மட்டுமே இப்படிப்பட்ட ஒரு சோதனையை சகித்துக் கொண்டிருக்க முடியும்.

இந்த சோதனை தெய்வீக கட்டளையிலிருந்து வந்தது.

அதாவது வாக்குத்தத்தம் மையப்படுத்தப்பட்டிருந்த ஆபிரகாமின் ஒரே மகன் ஈசாக்கை மோரியா மலையில் தேவனுக்கு பலியாக செலுத்த வேண்டும் என்பதாகும். நிலைமையை சரியாக உணர, ஆபிரகாம் அந்த சமயத்தில் 125 வயதுடைய வராகவும், ஈசாக்கு, வாக்குத்தத்தத்தின்படி அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் ஒரு வழியாக கர்த்தரால் குறிப்பிடப்பட்டவராகவும் இருந்தார் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

ஈசாக்கின் பிறப்பிற்கு நீண்ட வருடங்களுக்கு முன்பு பதினான்கு வருட காலமாக இஸ்மயேல் தான் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு வழியாக இருக்கலாம் என்று ஆபிரகாம் நினைத்துக்கொண்டிருந்ததை நாம் பின்னால் சென்று ஞாபகத்தில் வைக்க வேண்டும். இன்னும் நாம் பின்னால் சென்று இஸ்மயேலின் பிறப்பிற்கு நீண்ட காலத்திற்கு முன்பாக ஆபிரகாம் அந்நியனாக அலைந்ததையும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காக காத்திருந்ததையும், அவரது மனைவி பிள்ளையில்லாமல் மலடியாக இருப்பதை உணர்ந்திருந்ததையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். ஐம்பது வருட காலம் நம்பியிருந்து காத்திருந்த பிறகு இப்போது அவரை பலிகொடுக்க தேவன் விரும்பியது எல்லாம் ஆபிரகாமின் விசுவாசத்தை, உண்மைத்தன்மையை விளங்கச் செய்வதற்காக இருக்குமா? ஆம், அப்படித்தான் இருந்தது. அவர் பிரமாணத்தின் இசைவான உறுதிமொழியை பெற்றிருந்தார். அது கற்பனையாக இருக்கவில்லை. அது சூனிக்காரி அல்லது மந்திரவாதியின் இரகசிய வார்த்தையல்ல. அது கனவல்ல.

ஆபிரகாமின் நற்பண்புகளில் ஒன்று தெய்வீக கட்டளைக்கு சரியானபடி கீழ்ப்படிதல் ஆகும். உடனே அவர் புறப்பட்டார். "உனக்கு அவர் சொன்னபடியெல்லாம் செய்." உடனே அவர் பிரயாணத்துக்கு தனது வேலைக்காரர்களையும் அழைத்துச் சென்றார். வேலைக்காரர்களை கீழேயே விட்டுவிட்டு, ஆபிரகாம் ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா மலையின் உச்சிக்கு பிரயாணப்பட்டார். அந்த இடம்தான் நூற்றாண்டுகளுக்கு பிறகு சாலொமோனின் ஆலயத்தின் இடமாக ஆனது. ஈசாக்கு கட்டி வைக்கப்பட்ட அந்த பாறைதான் தாமிர பலிபீடத்தின் இடமாக ஆனது.

சமீபத்தில் நாங்கள் எருசலேம் சென்றபோது, இந்த பாறையை மிகவும் ஆர்வத்துடன் பார்த்தோம். தேவாலயம் எங்கே கட்டப்பட வேண்டும் என்று தேவன் முன் குறித்த இடத்திற்கு ஆபிரகாமை அவர் அனுப்பி தமது ஞானத்தை வெளிப்படுத்தினதை நாம் நினைத்துப் பார்க்கிறோம். அந்த பாறை இரும்பு வேலி போடப்பட்டிருந்தது; அதைப் பார்க்கலாம், ஆனால் தொட முடியாது. அதன் நடுவில் ஒரு துவாரம் இருக்கிறது. அது பலியிலிருந்து வருகின்ற அதிகப்படியான இரத்தம் வெளியேறுவதற்காக வைக்கப்பட்டுள்ளது என்று ஐதீகம் சொல்லுகிறது.

இன்றைய பாடத்தின் அம்சங்கள் எப்படி நமது சிந்தைக்கு வந்தது என்பதை ஞாபகத்தில் கொண்டு வருவோம். மிகவும் வயதான மனிதன் ஆபிரகாம் வாக்குத்தத்தத்தின்படி வாரிசாகிய தனது பக்தியுள்ள மகனுடன் இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். கட்டைகள் அங்கே வைக்கப்பட்டது. பிறகு பிதா தனது மகனிடம் தேவனுடைய கட்டளையை, தடுமாறும் உதடுகளுடன் ஆனால் உறுதியுடன் கூறினார். அவர் அங்கே தனது மகனை ஒப்புக் கொடுத்து, கத்தி அவன்மேல் படுமுன்பே, பரலோக பார்வையில் பலியானது நிறைவேறினது. கத்தியுடனான கை நிறுத்தப்பட்டது. அப்போஸ்தலர் விவரிப்பதாவது: "மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்ப பெற்றுக் கொண்டான்." (எபிரேயர் 11:19)

## இவையனைத்தின் உண்மைப் பொருள்

பழங்காலத்தில் இந்த நிகழ்வுகள் எல்லாம் அதை நடப்பித்தவர்கள் மேல் அதன் பலன்களைக் கொடுத்தது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கு, பரிசுத்த ஆவியினால் போதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் அதிகமாக அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஆபிரகாம், சர்வ வல்லவருக்கு நிழலாகவும், ஈசாக்கு, தலையும் சரீரமும் இணைந்த கிறிஸ்துவுக்கு நிழலாகவும் இருக்கிறார் என்பதை முன்னரே பார்த்தோம். இங்கு நாம் உண்மைப்பொருளை பெற்றிருக்கிறோம். நம் நிமித்தமும் முழு உலகத்தின் பாவத்தினிமித்தமும் பரலோகப் பிதா தமது மகனை இலவசமாக ஒப்புக் கொடுத்தார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." அதாவது அவருக்குள் பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கும்படியாக அவரைத் தந்தருளினார்.

தேவன் தமது மகனை மகா பலியாக கொடுத்தது, அவரது நித்திய அழிவை அல்ல, அவரது அழிவை மட்டுமே அர்த்தப்படுத்தியது. அதாவது இயேசு கிறிஸ்து பூமிக்குரிய ஆசாபாசங்கள் நம்பிக்கைகள், நோக்கங்கள் அனைத்தையும் மரிக்கச் செய்து, பரிசுத்த ஆவியினால் புதிய நம்பிக்கைகள், புதிய கொள்கைகள் மற்றும் புதியநோக்கங்களுக்காக ஜெநிப்பிக்கப்பட வேண்டும்– திரைக்கப்பால்.

தேவன் தமது குமாரனை இலவசமாக நம் அனைவருக்காகவும் ஒப்புக் கொடுத்த போது, அவரை மரணத்திலோ அல்லது பலியின் மனித நிலைமையிலோ விட்டுவிடவில்லை. அவர் நமது கர்த்தரை மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுப்பி, பிதாவினிடத்தில் உலகத் தோற்றத்திற்கு முன்னே அவர் பெற்றிருந்த மகிமைக்கு, ஆம், அதற்கும் மேலான மகிமைக்கு உயர்த்தினார். தூதர்கள், கர்த்தத்துவங்கள் மற்றும் வல்லமைகளுக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தினார். இங்கே நாம் ஆபிரகாம் பலியிட்ட ஈசாக்கின் உண்மைப் பொருளை பெற்றிருக்கிறோம்.

## "அவரோடு நாம் பாடுபட்டால்"

ஆனால் உண்மைப் பொருளில் இன்னும் அதிகம் இருக்கிறது. இயேசு தமது சரீரமாகிய சபைக்கு தலையாயிருக்கும்படி தேவ கிருபை ஏற்பாடு செய்தது. ஆகையால் கிறிஸ்துவின் பாடுகள் தலையாகிய இயேசுவினால் ஏறக்குறைய பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டது. இந்த பாடுகள் உண்மையான ஈசாக்கின் பாடுகளில் ஒரு பகுதி மட்டுமே. இங்கே அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "சகோதரரே, நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்." (கலாத்தியர் 4:28)

பெந்தெகொஸ்தே நாளிலிருந்து உலகத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிற சபையானது கிறிஸ்துவின் மரணத்திற்கு ஒப்பான மரணத்தின்மூலம் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறுவதற்கான உண்மைத் தன்மையையும், விசுவாசத்தையும் தகுதியையும் நிரூபிக்க கோரப்படுகிறார்கள். அவருடைய அங்கங்களாக "நாம் அவரோடு கூட பாடுபட்டால், அவருடைய அங்கங்களாக "நாம்

அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்.'' பிதாவானவர் அவருக்குக் கொடுத்த பாத்திரமாகிய பாடுகளும், அவமானங்களும் அவரது உண்மைத் தன்மையையும் விசுவாசத்தையும் சோதிப்பதற்கான ஒரு சோதனை. இதே பாத்திரத்தை அவரது பின்னடியார்களுக்கு அவர் கொடுத்திருக்கிறார். நீங்கள் அனைவரும் அதிலே பானம் பண்ணுங்கள் என்று கூறி, தனது முன்னுதாரணத்தை பின்பற்றி தேவனிடத்தில் உங்கள் அன்பையும் விசுவாசத்தையும் அவரினிமித்தம் மரணபரியந்தம் விளங்கச் செய்யுங்கள் என்றார்.

கர்த்தராகிய இயேசு அவரது ஆடுகளை பாதுகாக்கிறார் என்று அவரே தெளிவாக கூறினார். பரிசுத்த ஸ்தேவானின் மரணத்திற்கும் சபையின் துன்புறுத்துதலுக்கும் காரணமாயிருந்த தர்சு பட்டணத்தானாகிய சவுலை அவர் கண்டனம் பண்ணும்போது அவர் கூறுகிறதாவது: ''சவுலே, சவுலே, ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்.... நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.'' தர்சு பட்டணத்தானாகிய சவுல் நேரடியாக இயேசுவை துன்பப்படுத்தினதில்லை, ஆனால் அவருடைய சீஷர்களில் சிறியவனுக்கு எதைச் செய்தாலும் அது இயேசுவுக்கே செய்ததாகும். அது இன்னும் உண்மையாயிருக்கிறது. தெரிந்துகொள்ளப்பட்ட சபையாகிய கிறிஸ்துவின் சரீரம். முழுமையடைந்து மகிமையடையும் வரைக்கும் அது தொடரும். இடைக்காலத்தில், கர்த்தரின் சீஷரில் சிறியவனை துன்பப்படுத்துகிறவனும், அவரது சீஷரில் சிறியவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பவனும் மகிமையின் கர்த்தருக்கே அதை செய்கிறான்.

## புதரில் இருந்த ஆடு

ஆபிரகாம் தனது குமாரனை பலியாக கொடுப்பதை தேவன், தேவதூதன் மூலமாக தடுத்து நிறுத்தியபோது, அதற்கு பதிலாக புதரில் சிக்கியிருந்த ஒரு ஆடு பலியாக கொடுக்கப்பட்டது. இப்படியாக ஒரு பலி ஆடு ஆபிரகாமின் வித்தின் ஓர் அடையாளமானது. மேலும் மேசியாவின் ராஜ்யத்தினால் பூமியின் வம்சங்கள் அனைத்தும் ஆசீர்வதிக்கப்படும்படி, அவர்கள் சார்பாக தெய்வீக நீதியின் ஒப்புரவாகுதலின் வேலையின் ஒரு பகுதியை இது குறிக்கிறது.

தேவன் இஸ்ரயேலர்களுடன் தொடர்பு கொண்டபோது இதே எண்ணமே கடைபிடிக்கப்பட்டது என்பதை நாம் நினைவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படியாக பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, அதன் இரத்தம் அடையாளமாக தெளிக்கப்பட்டது. சுவிசேஷ யுகத்தில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினால் தவிர வேறு எதனாலும் முதற் பேரானவர்களின் சபையில் யாரும் இரட்சிக்கப்பட முடியாது என்ற உண்மையை முன்னறிவித்தது. ''உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.'' அதே போல இஸ்ரயேலுக்கும் அவர்கள் மூலமாக மற்ற வம்சங்கள், ஜாதியார், மற்றும் பாஷைக்காரர்களுக்கும் இந்த ஆசீர்வாதங்கள் வருதற்கு முன்பு ஒரு இரட்சிப்பின் வேலை அவசியம் என்பதை இஸ்ரயேலின் பாவ நிவாரண பலிகள் மற்றும் தகன பலிகளும் கூறுகின்றன.

ஆபிரகாமின் விசுவாச சோதனையிலிருந்து கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய அநேக பாடங்களில் சிலவற்றை கீழே கொடுக்கிறோம்.

1. முழு மனுக்குலத்திற்கும் இறுதியில் ஆசீர்வாதம் வருவதற்கு ஒருவரது மரணம் அவசியம். இயேசு நமது பாவங்களுக்காக மரிக்கவில்லையென்றால், அவைகளுக்கு மன்னிப்பு இருந்திருக்காது. அதனிமித்தம் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் இருந்திருக்காது. அப்படியானால் மரணம் என்பது நித்திரையை விட அதிகமாக இருந்திருக்கும். அது முழு அழிவாக இருந்திருக்கும்.

2. இயேசு தமது உடன்படிக்கையை உண்மையாக நிறைவேற்றி தமது ஜீவனை கொடுக்காதிருந்தால், மகா ஆசீர்வாதத்திலும் தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்துதலிலும் பங்குபெற்றிருக்க முடியாது. அவர் மரணபரியந்தம், ''அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகிய தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்'' (பிலிப்பியர் 2:8,9) என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார்.

3. இதே ஒழுங்கே சபையிலுள்ள அனைவருக்கும் பொருந்தும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். நமது ஜீவனை அர்ப்பணம் செய்தால் மட்டும் போதாது. நமது ஜீவனை கொடுப்பதிலும். சிலுவையை எடுப்பதிலும், பாத்திரத்தில் பானம் பண்ணுவதிலும் மரணம் பரியந்தம் மூழ்கியிருப்பதிலும் நாம் நமது விசுவாசத்தையும் உண்மைத்தன்மையையும் காண்பிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்கள்தான் மேசியாவுடன் மகிமையின் சிங்காசனத்தில் பங்குபெறுவார்கள். ''நாம் அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரோடே கூட மரித்தோமானால், அவரோடேகூட பிழைத்துமிருப்போம்.''

*பொறுமையுடனும் அடக்கத்துடனும் இரு; ஒவ்வொரு பேரழிவும்*
*உன்னை அன்பான கர்த்தரிடத்தில் நெருக்கி கொண்டுவரும்.*
*இந்த சோதனைகள் உன்னை ஆசீர்வதிக்கப்பட்ட உன்*
*ஆண்டவரைப்போல ஆக்குகிறது,*
*அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், அவரது கிருபை கிடைக்கும்.*

*பொறுமையுடனும் அடக்கத்துடனும் இரு; பலம் கொடுக்கப்பட்டிருக்கிறது.*
*களைப்பான வழியின் ஒவ்வொரு அடியிலும்,*
*இருண்ட இரவு பூரண நாளுக்கு இடம் கொடுக்கும்போது,*
*இவையெல்லாவற்றிற்காகவும் பரத்திற்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும்.*

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ, **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R. செல்வராஜ்.** சென்னை வேதமாணவர் சபை.

எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.

சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**